உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை

# குமரகுருபரன்



மலர் 17 | பராபவ-ஹூ ஐப்பசித் திங்கள் 1ம்வ [17-10-66] | இதழ் 10

# நீதிநெறி விளக்கம்

## ( கட்டுரை 5 )

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்

**சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்**

ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,

காஞ்சிபுரம்.

---

"எத்துணைய வாயினும் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகும் — உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை யின்றெனி னென்னும் அஃதுண்டேற்
பொன்மலர் நாற்றம் உடைத்து."

(1) உரை :— "ஒருவனிடத்துள்ள கல்வி எத்துணைப் பெருக்கம் உடையதாயினும் இடத்தினை அறிந்து சொற்களைக் கொண்டு போய்ச் சேர்த்துப் பொருள் கொள்ளும் உணர்வு இல்லையாயின், அக்கல்வி அவனிடத்து இல்லை என்று எண்ணப்

படும். அவ்வாறே உய்த்துணர்ந்த இடத்தும் வாக்குவன்மை இல்லையாயின் அதனால் யாது ப்யன் உளதாகும்? வாக்குவன்மையும் உளதாயின், பொன்னாலாய பூவானது பரிமளமும் அதனை ஒக்கும்."

(இது மஹாவித்வ சிரோமணி சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் எழுதியது.) இதில் 'அஃது' என்ற சுட்டுக்கு அவ்வாக்கு வன்மை என்றுரைத்தல் வேண்டும். 'எத்துணையது' என்று ஒருமைப் பாடங்கொண்டெழுதிய உரை இது. 'உய்த்துணர்வு' என்றதற்கு, "சொற்களைக் கொண்டு போய்ச் சேர்த்துப் பொருள் கொள்ளும் உணர்வு" என்று உரைத்துள்ளார். "பொற் பூவானது பரிமளமும் உடையதாயின், எவ்வாறு சிறக்குமோ அவ்வாறே உய்த்துணர்வும் சொல்வன்மையும் உடையவனுடைய கல்வி சிறக்குமென்பது கருத்து." இவன் யாதும் அறியான் என்று யாவரானும் இகழப்படுதல் பற்றி இல்லாகும் என்றும், யாதும் பயன்படாமை பற்றி என்னாகும் என்றும் கூறினர். உய்த்துணர்வு பொன்மலருக்கும் அதனோடு சொல் வன்மை அம்மலர் பரிமள முடைமைக்கும் சமம் எனக் கொள்க. உய்த்துணர்வு என்பதற்குப் புத்தியை நூல்களிலே செலுத்தி ஆராய்ந்து பொருந்துமாறு அறிதல் என்பதும் பொருந்தும்." (இவையும் அப்புலவர் உரையே).

(2) உரை:— "எவ்வளவின ஆனாலும் கல்விகளை நல் லாசிரியனைத் தேர்ந்து (அடுத்து) (அவனிடத்து) ஆராய்ந்து அறிதல் இல்லையானால், (சிறந்த கல்வியறிவு) இல்லையாம். (அப்படி) ஆராய்ந்தறிந்தும், (பிறர்க்குப்) போதிக்கும் திறம் இல்லையானால், (அக்கல்வி) என்னபயன்படும்? அந்தப் போதனா சக்தி உள்ளதானால் (அப்பொழுது அக்கல்வி) பொன்னாற் செய்த பூ நறுமண முடையதாவது (போலும்).

மிக அதிசயித்துக் கொண்டாடித் தலைமேற்கொள்ளத் தக்க தென்றபடி" (இவ்வுரை புகழுடல் எய்திய வை. மு. ச., வை. மு. கோ. இருவரது பள்ளிப்பாடக் குறிப்பேட்டிற் கண்டது.)

இதில் 'எத்துணைய' என்னும் பன்மைப் பாடம் கொண்டு உரைத்துளது. 'இடம்' என்றதற்கு'நல்லாசிரியன்' என்றும்,'உய்த் துணர்ந்து' என்றதற்கு அவனிடத்து ஆராய்ந்து அறிதல் என்றும்,

'சொல்வன்மை' என்றதற்கு(ப் பிறர்க்குப்) போதிக்கும் திறம் என்றும், பொன்மலர் நாற்றம் உடைத்தாதல் மிக அதிசயித்துக் கொண்டாடற்குரியது என்றும், 'பொன்மலர்' என்றதால் தலைமேற் கொள்ளத் தக்கது என்றும் உரைத்தார் இப்பெரும் புலவர்.

"நல்லாசிரியனை அடுத்து ஐயந்திரிபற முற்றக் கற்ற வித்தை பலர்க்கும் அறிய எடுத்துச் சொல்லுந்திறம் அமைந்தால் மாத்திரமே சிறப்புப் பெறும் என்பது கருத்து." 'பொன்மலர் நாற்ற முடைத்து' என்றது இல்பொருளுவமை; வடநூலார் 'அபூதோபமை' என்பார். பொன்மலர் நாற்றமுடையது போலும் என்னுமல் 'உடையது' உடைத்து என உபமேயத்தோடு ஒற்றுமை நயம் படக் கூறியது காட்சியணி. அறிவுடையோரால் நன்கு மதிக்கப்படும் என்க. கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் உலகியலறிவோடு உயர் குணம் இணையவும் ஐயந்தீரப் பொருளையுணர்த்தலும் அமையாத போலியாசிரியனிடம் படித்தால் தேர்ச்சியுண்டாகாது. ஆதலால் 'இடம் அறிந்து' எனப்பட்டது. இடம் - கற்றற்கு உரிய இடம் என ஆசிரியனைக் குறித்தது. இனி எவ்வளவு அதிகமாகக் கல்வி கற்பினும் அவ்வவ்விடத்திற்குப் பொருந்தப் பொருள்களை ஆராய்ந்தறிதல் இல்லையானல் என்ன பயன்படும்? என உரைப்பினும் அமையுமாம். "இணர்ஊழ்த்து நாறு மலர்அனையர் கற்றது உணர விரித்துரையா தார்" எனக் குறளிற் சொல் வன்மையில்லாதார்க்கு நாற்றமில்லாத மலரை உவமை கூறியவாறு காண்க.

துணைய – பலவின் பாற் குறிப்பு வினையாலணையும் பெயர். ஆயினும் என்ற உம்மை மிகுதி குறைவு என்ற இரண்டுக்கும் பொதுவாய் நிற்றலால் உயர்வு சிறப்போடு இழிவு சிறப்பையும் உணர்த்தும். உணர்ந்தும் – உம், உயர்வு சிறப்பு. சொல்வன்மை — சொல்லும் வன்மை என வினைத்தொகை. நாற்றம் - தொழிற் பெயர். நாறு - பகுதி. அம் - விகுதி. ற் - விரித்தல். உடைத்து - உடைமை என்னும் பண்பினடியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு முற்று. (இவையெல்லாம் அக் குறிப்பேட்டில் (Notes) உள்ளவை.) இதில் நாற்றம் என்ற தன் இலக்கணக் குறிப்பு எவ்வாறு பொருந்துமோ?

"கல்வியின் துறை பல ஆதலின் எத்துணைய எனப்பட்டது. துணையது எனப் பாடங் கொள்வாருமுளர். இடம் அறிந்து உய்த்துணர்வு - இடத்தினை அறிந்து சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளும் உணர்வு. பொனமலர் - அழகிய மலர். பொன்னுற் செய்யப் பட்ட மலர் என்பாருமுளர்." (இது புகழுடல் எய்திய வி. சிதம்பரராமலிங்கம்பிள்ளை என்னும் பெரும் புலவர் எழுதிய குறிப்புரை.) இதிற் பொன் என்றதற்கு அழகெனவும் பொருள் கொணடதறிக. இடமறிந்து உய்த்துணர்வு என்றதால் "கொண்டு கூட்டுப் பொருள் கோள்" என்றதன் பாற்படும் உணர்வே குறிக்கப்பட்டது காண்க. இது பொருந்தாதென்பதைப் பின்னர் அறியலாம்.

"கல்வி பலவகைப் படுதலின் எத்துணைய எனப் பன்மையாற் கூறினர். இடம் அறிந்து - நூல்களில் நுண்மையும் பொருளாழமும் உடைய இடங்களை அறிந்து, உய்த்துணர்வு - மதிநுட்பத்தால் ஆராய்ந்து அறிதல். இல்லாகும் - கல்வியின் பயன் இல்லையாகும். கல்வியும் உய்த்துணர்வும் ஒருங்கு வேண்டும் என்கின்றார்; "மதிநுட்பம் நூலோ டுடையார்" (குறள் 636 ) என்றார் திருவள்ளுவரும். சொல்வன்மை - தாம் கற்றவற்றைப் பிறர் அறியும் வண்ணம் சொல்லுந்திறமை. இன்றெனின் என் ஆகும் - இல்லையாறல் அவ்வுய்த்துணரும் திறமையும் என்ன பயனையுடையதாகும். (பிரதி பேதம்) 'என்னும்'; [இவர் கொண்ட பாடம் 'என்னுகும்' என்றது. அப்பாடத்திற்கு "அஃதுண்டேல்" என்பது "அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு பெற்றான் நெடிதுய்க்கு மாறு" என்பதில் நாலாவது சீர் முதல், நிரையசை யலகு பெற்றதுபோற் பெற்று நின்றதாகும்.] பொன்மலர் நாற்றம் உடைத்து- அச் சொல்வன்மை நறுமணத்தைப் பெற்ற பொன் மலரைப் போன்ற தன்மையுடையது; யாவற்றினுஞ் சிறந்தது என்ற படி." (இது நம் தமிழ்த்தெய்வம் அருளிய குறிப்புரை.) இந் நீதிநெறிவிளக்கத்தில் (79) 'பாவம் இஃதென்னர்' (88) ஆயினும் அஃதுற்றார் என நின்ற ஆய்தத்தின் அலகறிக.

இக் குறிப்புரையில் 'இடம்' என்றதன் விளக்கம் மிகச் சிறந்தது. அதுவே முன்னோர் உரைகளில் உய்த்துணர்ந்த பெற்

றிக்கு ஒத்தது. அப்பெற்றிக்குப் பல பல எடுத்துக் காட்டுக்கள் உள்ளன. அவற்றுட் சில பின்னர்க்காட்டுதும். உய்த்துணர் வில்லெனின் கல்வியின் பயன் இல்லை. இவ்வாறு நம் தமிழ்த் தெய்வத்தின் உரையில் தான் விளங்கிற்று. சுன்னுகம் புலவர் உரையில் இவ்வுரையே உளதெனினும், இவ்விளக்கம் இல்லை. வை. மு. கோ. உரை வேறுபட்டுள்ளது. 'கல்விகரையில' ஆயி னும் அவற்றை ஒருவாற்ருல் தொகை செய்து அஷ்டாதச வித் தைகள் என்றலின், 'எத்துணைய' எனப் பன்மையிற் கூறினுர்.

'எத்துணைய வேனும்' என்றதன் பொருத்தம் உணர நீதி நெறி விளக்கத்தில் 10, 87, 89ஆம் பாக்களை நோக்குக.

உய்தல் தன்வினை, உய்த்தல் பிறவினை. இரண்டனையும் நீதிநெறி விளக்கத்தில் 38, 50, 96, 9, 92,ஆம் பாக்களிற் பார்க்க. உய்தல்:- அறிவின் வினை. உய்த்தல் :- அறிஞன் வினை. நுழை (புலம்) தலும் நுழைத்தலும் அன்ன.

'கந்த புராணச் சுருக்கம்' என்னும் தருமை யாதீனத்துப் பனுவலின் வெளியீடு ஒன்று இக் காஞ்சி நகர் மகாவித்துவான் சபாபதி முதலியாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அதன் சார்த் துக் கவியுள், அவரால் ஓர் உரை இந் நீதிநெறி விளக்கத்துக்கு எழுதப்பட் டுள்ளதென்று சிதம்பரத்திலிருந்த பாவலர் ஒரு வராற் குறிக்கப்பட்டுள்ளது. அது கிடைப்பின் இக்கட்டுரை கற்போர்க்கும், ஏனையோர்க்கும் (அஃதும்) உதவியாயிருக்கும். புகழுடலில் விளங்கும் பரிதிமாற் கலைஞர் (வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார்) 50பாடற்குரை யெழுதியதாகக்கேள்வி யுண்டு. டலவுரைகளை யாராய்ந்து குறித்து வெளியிட்ட தருமை யாதீனப் பதிப்பும் இப்போது கிடைப்பதரிது.

'உய்த்துணர்வு' என்றதில் (1) உய்த்தற்ருெழில் எதனது? (2) எதனை (எஃது) உய்ப்பது? (3) உணர்தல் எதனது? (4) எதனை (எஃது) உணர்வது? இக் கேள்விகள் எழுதல் வேண்டும். இவற் றிற்குத் தக்க விடையை உணர்தல் வேண்டும்.

உய்த்துணர்வு என்பது, சேனுவரையர் 'ஆற்றல் முதலியன வற்ருற் கொள்வது சொல் இல்வழி' எனவும், 'சொல் இல்

வழியது உய்த்துணர்வது' எனவும்,'உய்த்துணர்வது சொல் இல் வழி' எனவும் (சூ. 1, 11, 18,) எழுதியவாற்ருன் உணரப் படுவ தொன்று. ஆற்றல், சொல்லாற்றல், தொடராற்றல், பொரு ளாற்றல் எனப் பலவுகைப்படும். சப்த சக்தி, வாக்ய சக்தி, அர்த்த சக்தி என்பன அவை.

'சொல்வன்மை' க்குரிய வழிவகைகளை நன்னூலில் உள்ள 'நூலினியல்பு', 'ஈதலியல்பு', 'நூல்யாப்பு' முதலிய பலவற்ருல் உய்த்துணர்ந்து கொள்ளல் வேண்டும்.

'உய்த்துணர்வு' என்பதற்கு விளக்கம் வேண்டும். அதனை அறியாமல், பள்ளிப்பிள்ளைகள் இவ்வெண்பாப்பொருளை முற்றும் உணர்தல் அரிது. கற்பிப்போரும் இவ்வெண்பாப் பொருளை விளக்குங்கால், உய்த்துணர்வு இல்லாமற் சொல்லலாகாது. யாமும் வந்தவாசி உயர் பள்ளியில் இதன் பொருளையுணர்ந்து கற்பித்திலேம். ஆர்க்காடு உயர் பள்ளியிற் கற்பித்தபோது விளக்கிச்சொல்ல வல்லம் ஆயினம். தமிழாசிரியர் பலர்க்கு விளக்கினேம். அவருட்சிலர் உணர்ந்து வந்தனர்; பலர் வியவா தாரும் நயவாதாரும் ஆயினர்.

தொல்காப்பியத்து மரபியலுரையில், "உய்த்துக் கொண்டுணர் தல்" என்றதற்கு எழுதியுள்ளது இது ;—

ஒருவழி ஒருபொருள் சொல்லியக்கால் அதன்கண்ணே மற்ருெரு பொருளினையும் கொணர்ந்து கொண்டு அறியுமாறு தோன்றச் செய்தல்". அவை 'நெட்டெழுத் திம்பரும் தொடர் மொழி யீற்றும் குற்றிய லுகரம் வல்லாறு ஊர்ந்தே' என இடனும் பற்றுக்கோடும் கூறி அதனுன் ஈருக்கம் கோடலும்,

'குற்றியலுகரம் முறைப்பெயர் மருங்கின் ஒற்றிய நகர மிசை நகரமொடு முதலும்' என முதலாக்கம் கூறியதனுனே இடனும் பற்றுக்கோடும் அதுவே எனக் கோடலும் போல்வன. பெயர்வினைக்கு ஓதிய இலக்கணம் ஒழிந்தசொற்கும் செவ்வனம் செல்லும் என்று கோடல் அதற்கு இனம் எனப்படும்.

ஈண்டு நுதலியதறிதலோடும் ஞாபகங் கூறலோடும் இத னிடை வேற்றுமை என்னை என்னுந்தடையும் விடையும் கூறிய

வாறு அறிக. 'நுதலியதறிதல்' என்றதன் உரைக்கண்ணும் இது குறிக்கப்பட்டதுணர்க.

திருக்கோவையார் (236) உரைக்கண், பேராசிரியர் "சித்தத் தளந்து தேடுங் கோடாய் உய்த்துணர் வோரை யுரைமின் என்றது" என்னுங் கொளுவின் விளக்கத்தில் 'உய்த்துணர்வோரை' – "வெளிப்படாத பொருளை யேதுக்களாலுணர் வோரை" என்றுரைத்தார். மற்றேருரையாசிரியர் 'விசாரித்தறிய வல்லவர்களை' என்ருர். உய்த்துணர்வு என்றதன் பொருளை யுய்த்துணர்வோர் ஈண்டு ஆழ்ந்துணர்வாராக.

'உய்த்துணர்தல்' இருத்தலால், நூலோர்க்கு 'உய்த்துணர வைப்பு' என்ற ஒன்றுண்டாயிற்று. அவர் உய்த்துணரவைப்புள்ள தாற்ருன், நூலைக்கற்போர்க்கு உய்த்துணர்தல் இன்றியமையாத தாயிற்று. இதரேதரம் இது. தந்திரவுத்தியுள் 'உய்த்துணர வைப்பு' என்பதும் முக்கியம் ஆனதொன்று.

"மகரம் நைந்து என அநுவதித்தார், மகரம் குறுகுதற்குத் தொடரும் னகர ணகரங்கள் லகர ளகரம் திரிந்தன என்பதூஉம் அக்குறுக்கம் செய்யுட்கண்ணது என்பதூஉம் உய்த்துணர்தற்கு என்க." (நன்னூல் 120)

"புணர்ந்தவழி புணரும்வழி என்னது புணர்வழி எனப் பொதுமையிற் கூறவே, இம்மூவகைப் புணர்ச்சியுட் சாரியை விதித்தனவற்றுள்ளும் வருமாறு இவ்வாறு என உய்த்துணர்க என்ருராயிற்று." (நன்னூல் 243)

'இயல்பின் விகாரமும் விகாரத்தியல்பும்' (நன்னூல் 255) என்றதன் விசேடவுரைக்கண், "மேலைச்சூத்திரத்து, "ஒப்பன கொளலே" என்றமையான் இவ்விதிகளை இரண்டாம் வேற்றுமைப்புணர்ச்சி வந்துழியெல்லாம் கூட்டாது (1) வேற்றுமைப் பொதுப்புணர்ச்சியோடு ஒருங்கொத்து முடிவன இவை (2) இப் புறனடைச் சிறப்பு விதியான் முடிவன இவை என உய்த்துணர்ந்து ஏற்பனவற்ருேடு முடிக்க."

"விகுதியே பதமே சாரியையே உருபே என்னும் நான்கின் புணர்ச்சிக் கண்ணும் விதிகள் பொதுபடக் கூறப்பட்டன வேனும்

அவ்விதிகளுள் இவ்விதி இதற்குப் பொருந்தும் இதற்குப் பொருந்தாது என உய்த்துணர்ந்து எவ்விதி எதற்குப்பொருந்துமோ அவ்விதியை அதற்குக் கொள்க" (நன்னூல் 254).

இவ்வாறே அடுக்காய் வந்தனவும் இடைப்பிறவந்தனவும் உய்த்துணர்ந்து கொள்க (நன்னூல் 356). இங்குக் "கருதலர்ச் சீறிய கடுங்கோல்யானை" என்றதன் பொருள் முடிபு கூறியது குற்றமுடைத்து. அஃது ஈண்டு விளக்கற்பாலதன்று. அறிஞர் ஆய்ந்து கொள்க.

(1) தனித்தனியாக மூன்று கால வினைத்தொகையும் (2) ஒவ்வொரு காலத்தையே பற்றுது மூக்காலமும் ஒருங்கு பற்றிவரும் வினைத் தொகையும் உணர்த்தி, மேல், இங்கனம் காலவிகற்பம் பற்றிப் புடைப்பெயர் வினைகருதாது, 'அரிவாள்' 'ஆவுரிஞ்சு தறி' என்றாற்போல 'அடுகளிறு' என்பது இத்தொழிற்கு உரியது இஃது என்னும் பொருள்பட வருமாயின், வினைத் தொகைக் குறிப்பு எனப்படும் என்க. இவ்வாறே ஏனைய வினைத் தொகைகளை யெல்லாம் உய்த்துணர்ந்து கொள்க. (364)

[எல்லா வினைத்தொகைகளையும் உய்த்துணர்தல் எவர்க்கும் இயலாது. 'அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்' ஆயினும் அவ்வினை எவ்வினை என்று ஆர் அறிவார்?]

நன்னூல் 96, 321 சூ. உரைகளையும் நோக்கி யுணர்க. சங்கர நமச்சிவாயப் புலவர் எழுதிய உரையே இவை எல்லாம். சூ. 380-ல் உய்த்துணர்ந்து களைக என்றதும் அறிக.

நன்னூல் மயிலைநாதருரைக் கண்ணும் யாப்பருங்கல விரித்துரைக் கண்ணும் 'உய்த்துணர்நிரனிறை'க்குக் காட்டிய மேற்கோட் செய்யுட்களையும் அவற்றின் பொருளையும் அறிதல் உய்த்துணரவேண்டுவார் கடனாகும். மயிலைநாதத்தில் ஒற்றளபெடைச் சூத்திரத் துரையையும் நோக்குக. யாப்பருங்கல விரித்துரை பக்கம் 299 (புதுப்பதிப்பு) எல்லாம் சோதிடப் பாக்கள். விரி வஞ்சி விடுத்தாம்.

குறுந்தொகையுரை (உ வே. சா.) பா. 272, 343 பார்க்க. சீவகசிந்தாமணி (2627) யுரையில், தேவர் உய்த்துணரவைத்த

சிறப்பை நச்சினுர்க்கினியர் புலப்படுத்துந்திறம் மிகப் பாராட்டத் தக்கது.

"அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்" (திருக்குறள் 203)

என்ற பதசாரத்தில், "விடுதற்குக் காரணமாகிய அறிவை விடலென்றும் செயத்தக்குழியும் செய்யா தொழியவே தமக்குத் துன்பம் வாராது என உய்த்துணர்தலின், அதனை அறிவினுள் எல்லாம் தலை என்றும் கூறினுர்" என்றும்,

"அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்" (திருக்குறள் 441)

"அறன் – அறத்தினது நுண்மை; அற(த்தினது) நுண்மை நூலானேயன்றி உய்த்துணர்வானும் அறிய வேண்டுதலின், அறன் அறிந்து என்ருர்" என்றும்,

"கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்கொட்கின்
எற்ரு விழுமந் தரும்." (திருக்குறள் 663)

"மறைத்துச் செய்வதாவது அங்கம் ஐந்தும் எண்ணியவாறு பிறர் அறியாமலும் தான் அறிந்ததூஉம், தன் இங்கிதம், வடிவு, செயல் சொற்களான் உய்த்துணராமலும் அடக்கிச் செய்தல்" (என்றும் எழுதியாமை காண்க.)

இக்கட்டுரையை நோக்குவோர் இதிற்கூறிய நூல்களையும் நோக்கி உய்த்துணர்வு இத்தன்மையது என்றுணர்ந்து கொள்க. ஈண்டு உய்த்துணர்தற்கு இங்கிதம், வடிவு, செயல், சொற்கள் முதலியவை ஏதுக்களாயவாறுபோலக் கல்வியிற் சொற்கள், தொடர்கள், பொருள்புலப்பாடு முதலியவை ஏதுக்களாயமையும். அவற்றுள் ஒவ்வொன்றற்கும் ஒவ்வோர் உதாரணம் பழைய நூல்களிலிருந்து காட்டலாம். இதுவே விரிவுற்றது. இன்னம் விரிதல் கூடாதன்ருே?

'சொல்வன்மை' என்றது சொல்லும் வன்மை என்னும் எதிர்கால வினைத்தொகையா? சொல்லினது வன்மை என்னும் ஆறன் வேற்றுமைத்தொகையா? (1) 'சொல்லுந்திறம்' (2) 'போதிக்குந்திறம்' என்ற இரண்டு பொருளும் வினைத்தொகையாக் கொண்டுரைத்தனவே. 'வாக்குவன்மை' என்றது வாக்கினது வன்மை

என வேற்றுமைப் பொருளதாகும். இவ்வேறுபாட்டை முதல் ஈருரைகளில் நோக்கியுணர்க. 'கடடுரைவன்மை' என்றதில் உள்ள உரை வன்மையே சொல்வன்மையாம். அது வாக்கு வன்மையாதல் குற்றமின்றேனும் தொடர்க்குப் பொருள் கொள்ளுங்கால் அது பொருந்தாமை அறிக. 'சொல்வளம்' என்ற முற்பாட்டதும் 'சொல்வன்மை' என்ற இப்பாட்டதும் ஒன்ருகாமையாலும் இஃது இனிது விளங்கும். அறிவை உய்த்துப் பொருளையுணர்தல் உய்த்துணர்தல். புலத்தை நுழைப்பர் புலவர்; புலம் நுழையும்; அப்புலம் பொருள் நுட்பத்தையுணரும். அவ்வுணர்ச்சி மாணுதலுறும். உற்ருல் அது 'நுண்மாண் நுழைபுலம்' எனப்படும். அத்தகு நெறியிற் புலத்தை நுழைத்தலே உய்த்தல். அவ்வாறுய்த்துப் புலனுலுணரப்படுவது செய்யுட் சொற்களின் ஆகும் வெளிப்படைப் பொருள் அன்று. அச்சொற்களாலும், தொடர்களாலும், அச்சொற்றொடர்களின் பொருள்களாலும் உணரப்படும் பொருளே உய்த்துணர்பொருள். இவ்வுண்மையை இக்கட்டுரையிற் காட்டிய இலக்கணப் பகுதிகளாலும் இலக்கியப்பகுதிகளாலும் இனிது புலப்படக் காணலாம்.

கற்ருேரது 'சொல்வன்மை' தொல்காப்பியம் நன்னூல் முதலியன கொண்டுள்ள வைப்புமுறையும் அம்முறை பிறழாமையும் பிறவும் உணர்தலால் ஒருவாறு தெளியத்தகுவது.

"சொல்வன்மை யுண்டெனிற் கொன்னே விடுத்தொழிதல்
நல்வினை கோறலின் வேறல்ல - வல்லைத்தம்
ஆக்கம் கெடுவ துளதெனினும் அஞ்சுபவோ
வாக்கின் பயன்கொள் பவர்" (நீ. நெ. வி. 69)

என்றதிற் சொல் வன்மையைக் கொன்னே விடுத்தொழிதல் புண்ணியத்தைக் கொல்வதாதலும், அவ் வாக்கின் பயன் கோடலின் அஞ்சாமை வேண்டுதலும், ஆக்கம் கெடினும் கெடுக; வீணே கெடாது சொல்வன்மையைக் காத்தல் வேண்டுமென்றலும் இவ் வாசிரியர் உட்கோள் ஆகும் எனல் விளங்கும்.

இவ் வெண்பா ஆருவது (வெண்) பாடலாக இருத்தல் வேண்டும். அறுபத்தொன்பதாவது பாடலாக இருத்தல் எவ்வாற்ருனும் இயைபு உடையதாகாது. நீதிநெறி விளக்கத்தை இனி அச்சிடுவார் இது போன்ற பிறழ்வு ஆராய்ந்து களைதல் நன்று.

இடம் அறிந்து உய்த்துணர்தல் கல்வியின் திறத்தில் மட்டும் வேண்டுவதாம் எனக் கோடல் இல்லை. கடவுட்டிறத்திலும் வேண்டுவதே யாகும். வியாத முனிவர் சிவத்தை யுய்த்துணராத குற்றத்தால் முன்னை நான் மறையும் முறைப்பட நிறீஇய மன்னிருஞ் சிறப்புடையரா யிருந்தும், பொய்ம் மொழிந்து கையிழந்தார். பொய்ம் மொழியால் தாம் கூறிய கூற்றின் பயனை இழந்தார் ஆனார். அதை 'நாவிழந்து' 'வாயிழந்து' என்றனர் பாவாணர். "வேதம் துறை செய்தான் மெய் துணியான் கை துணிந்தான்" "நான் மறைக்குந்துறை கண்டார் தோளிழந்தார் நாவிழந்து இங்கு ஊன் மறைக்கமறைப் பு உண்டேம்உய்த்துணர்வு பெரியமே."(சிதம்பரச் செய்யுட் கோவை67.)ஈண்டு உய்த்துணர்வு என்றது எத்திறத்தில்? கடவுளை அவர் நமக்கு விளங்குமிடம் அறிந்து உய்த்துணருந் திறத்தில் பாசஞானம் பசுஞானங்களை நீக்கிப் பதிஞானத்தை உய்த்துக் கடவுளை யுணர்கின்ற திறத்தில்.

தொல், சொல், உரியியல் 93 ஆவது நூற்பா முதலிய வற்றாலும் சொல்வன்மை சிறிது உணரப்படும். திருக்குறளில் 'அமைச்சு' 'சொல்வன்மை' என்ற அதிகாரங்களிற் சொல்லப் பட்ட சொல்வன்மை அமைச்சர்க்கே சிறப்பின் உரியது.

இந் நீதிநெறி விளக்கத்திற் கூறிய "சொல்வன்மை" கற்றவர் கல்விக்கெல்லாம் பொதுவின் உரியது. இவ் வேறுபாட்டைப் பரிமேலழகர் உரையை வைத்துக் கற்றுணர்தல் நன்றாகும்.

(தொடரும்)



# திருமந்திரம் TIRUMANTIRAM

## ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member, Legislative Assembly,
MADRAS-31.

மலர் 17, இதழ் 9-ன் தொடர்ச்சி

## Precious is the Lord's Path
## இறைநெறி அரியது

126. பரிசறி வானவன், பண்பன், பகலோன்
பெரிசறி வானவர் பேற்றில் திகழும்;
துரிசற நீநினை, தூய்மணி வண்ணன்
அரிதவன் வைத்த அறிநெறி தானே.

The Heavenly Lord, He Knoweth our goal
He is tender hearted
The effulgent Sun that shines in the destiny of
Heavenly Beings of great wisdom;
Do thou think of in unsullied thought;
He is of the crystal pure hue,
And precious the path of Virtue He hath laid
for us.

நாம் நாடி நிற்பதை அறிந்தவன் இறைவன்; பண்பு நிறைந்த உள்ளம் படைத்தவன்; பேரறிவுடைய தேவர்கள் பெற்ற பேற்றில் ஒளிவிடும் ஞானசூரியன்; களங்கமற்ற படிக மணி போலும் நிறத்தையுடையவன்; அவனைக் களங்கமற நீ நினை; அவன் நமக்கு வைத்துப்போன சிவஞானநெறி பெறற் கரிய நெறியாகும்.

குறிப்பு வரி 1, பரிசறிவானவன் - 'பரிசறிவான்' + 'அவன்' என்றும், 'பரிசறி வானவன்' என்றும் கொள்ளலாம். 'பரிசு' - நமது குறிக்கோளான பேரின்பம், அல்லது, வினைக் கேற்ற பயன்.

1-2 'பெரிசறி வானவர் பேற்றில் திகழும் பகலோன்' - என்று கொண்டு கூட்டலாம். அலலது 'பகலோன்' என்று தனிநிலையாகவும் கொள்ளலாம். அவ்வாறாயின் 'திகழும்' என்பதை வினைமுற்றாகக்கொள்க.

'பகலோன்' என்றதைத் தனிநிலை என்புழி,,
பெருக்கம் நுகர்வினை பேரொளியாய் எங்கும்
அருக்கன் என நிற்கும் அருள்

என்னும் திருவருட்பயன் அடிகளைக் காண்க.

## God is beyond all religions

### இறைவன் சமயங்கடந்தவன்

127. ஆன சமயம் அதுஇது நன்றெனும்
மாய மனிதர் மயக்க மதுஒழி;
கானம் கடந்த கடவுளை நாடுமின்;
ஊனம் கடந்த உருவது வாமே.

This the right path, that the right path
-Be thou not tossed in such frail human doubts;
Seek thou the Being that is beyond the wilderness of doubts
His is the Form that transcends fleshly imperfections.

மெய்ந்நெறி இதுவா அதுவா என்று தெளிவு பெறாத மக்கள் பெறும் மயக்கத்தில் நீங்களும் வீழ்தல் வேண்டாம். சமயங்களான இந்த இருட் காடுகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட கடவுளைத் தேடுங்கள். அவன் பிறவாயாக்கைப்பெரியோனுகத் தோற்றமளிக்கின்ருன்.

குறிப்பு: வரி. 3 கானம்-சமய வேற்றுமை என்னும் இருள் சூழ்ந்தகாடு. வினைக்காடு எனலுமாம். முன்னே 121-வது பாட்டு பார்க்க.

4 ஊனம்-ஊனுலாகிய யாக்கை எனலுமாம்,

## The True and False Faiths-their Destination
## மெய்ந் நெறியும் பொய்ந் நெறியும் உய்க்குமிடங்கள்

128. அந்நெறி நாடி அமரர் முனிவரும்
செந்நெறிகண்டார்; சிவனெனப் பெற்றார்பின்;
முன்னெறிநாடி முதல்வன் அருளிலார்
சென்னெறி செல்லார்; திகைக்கின்றவாறே.

That Path they took
The immortal Devas and the saintly tapswis
And so reached the goal true
And then merged with Siva as one;
But they that followed froward faiths
Received not His Grace
They lost their way, and for ever wandereth.

அங்ஙனமாகிய மெய்ந் நெறியைக் கடைப்பிடித்துத்தேவர்களும் முனிவர்களும் உய்வகை கண்டனர்;பின்னர்த் தாமே சிவமாயினர். அஃதன்றி ஆணவம் முனைந்து நிற்கின்ற ஏனைய வழிகளிற் சென்றோர், தவறான வழிகளில் சென்றோராயினர்; இறைவன் அருளைப்பெறாது, தத்தளிக்கின்றனர்.

குறிப்பு: வரி. 3 முன்னெறி-ஆணவ முனைப்புக்கொண்ட பாதை.

(தொடரும்)

---

### அட்டவீரட்டத் தலங்கள்

காவிரியின் கரைக்கண்டி வீரட் டானம்
கடவூர்வீ ரட்டானம் காமருசீர் அதிகை
மேவியவீ ரட்டானம் வழுவை வீரட்டம்
வியன்பறியல் வீரட்டம் விடையூர்திக் கிடமாம்
கோவல்நகர் வீரட்டம் குறுக்கைவீ ரட்டம்
கோத்திட்டைக் குடிவீரட் டானமிவை கூறி
நாவில்நவின் றுரைப்பார்க்கு நணுகச் சென்றால்
நமன்தமருஞ் சிவன்தமரென் றகல்வர் நன்கே.

— அப்பர் தேவாரம்

# முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்

## உ ரை ந டை

பாலகவி வயிநாகரம்,
**திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,**
தேவகோட்டை.

(மலர் 17. இதழ் 9-ன் தொடர்ச்சி)

வள்ளைக் குழையிற் றுவடிபோம்
மடமா னேக்கிற் கடைசியர்கண்
மாலைக் குழல்வண் டோலமிட
மடுவில் வெடிபோம் வரிவாளை
பள்ளத் திருடுங் கழுவநீர்ப்
பரப்பென் றகல்வான் மிசைத்தாவப்
பாகீ ரதித்தீம் புனல்கிடைத்த
பரிசு வீட்டின் பயன்றுய்க்கும்
உள்ளக் கருத்தாற் பிறிதொன்றை
உண்மைப் பொருளென் றுள்ளவுந்தம்
உணர்விற் றெய்வங் கடைக்கூட்ட
உறுதி கிடைத்த படிபோலும்
அள்ளற் பழனப் புள்ளூருக்
கரசே வருக வருகவே
அருளா னந்தக் கடற்பிறந்த
அமுதே வருக வருகவே 58

வள்ளைக் கொடியை யொத்த காதுகளில் தாவிச் செல்லுகின்ற இளமான் விழியையுடைய கடைசியர்களது மாலையை அணிந்த கூந்தல்களில் வண்டுகள் ஓலமிட்டு ஒலிக்க நீர் மடுக்களில் துள்ளிச் செல்லுகின்ற கோடுகளையுடைய வாளை மீன்கள் பள்ளங்களைக் கருமை நிறைந்த கடற்பரப்பு என்றெண்ணி அகன்ற வானத்தின் மீது தாவ, அங்கே உள்ள வானக் கங்கை யாற்றின் இனியநீர் அவைகளுக்குக் கிடைத்த சிறப்பு முத்திப் பயனை நுகரும் மனக் கருத்தினுல் உண்மைப் பொருளல்லாத வொன்றை அது என்று எண்ணவும் தமது உணர்வில் தெய்வம்

கடைக்கூட்டி நிற்க நல்லுறுதி கிடைத்த தன்மையை ஒக்கின்ற சேறு மிக்க வயல்கள் சூழ்ந்த புள்ளூருக்கு அரசனே! வந்தருளு வாயாக! வந்தருளுவாயாக! அருளானந்தச் சிவக் கடலிற் பிறந்த அமுதமே! வந்தருளுவாயாக! வந்தருளுவாயாக!

நஞ்சிற் றோய்த்துக் கொலைதீற்றும்
நயன வேலுங் கரும்புருவ
நாமச் சிலையு மகலல்குல்
நகுபொற் றேரு மிகல்கடந்து
வஞ்சிக் கொடிநுண் ணிடைசாய்த்து
மதர்த்துக் களித்த மால்களிறும்
மற்றும் படைகள் பற்பலவும்
வகுத்துக் கொண்டு மடலவிழ்ந்த
கஞ்சத் தவிசிற் றிருவன்னார்
கடலந் தானைக் கைநிமிரக்
காமன் படைவீ டெனப்பொலியும்
காட்சி யானு மப்பெயரிட்
டஞ்சொற் றமிழோர் புகழ்வேளூர்க்
கரசே வருக வருகவே
அருளா னந்தக் கடற்பிறந்த
அமுதே வருக வருகவே 59

நஞ்சிலே தோய்த்துக் கொலையைச் செய்கின்ற கண்ணாகிய வேற்படையும், கரிய புருவமாகிய அச்சத்தைத் தருகின்ற விற் படையும், விரிந்த அல்குலாகிய களிப்பைத் தருகின்ற பொற் றேரும் பகையைக் கடந்து வஞ்சிக் கொடிபோன்ற நுண்ணிய இடையைச் சாய்த்துப் பருத்துக் களித்த பெரிய கொங்கை யாகிய யானையும் இன்னும் பற்பல படைகளும் வகுத்து வைத் துக்கொண்டு இதழ்கள் விரிந்த தாமரை ஆசனத்தில் இருக் கின்ற திருமகளை ஒத்த பெண்களின் கடல் போன்ற பெரிய படைவகுப்பு மேலோங்கி இருத்தலால் காமவேளின் படைவீடு என விளங்குகின்ற காட்சியினாலும் அந்த வேள் பெயரையிட்டு அழகிய சொற்றமிழ் வல்லோர் புகழ்கின்ற வேளூருக்கு அரசனே! வந்தருளுவாயாக! வந்தருளுவாயாக! அருளா னந்தச் சிவக் கடலிற் பிறந்த அமுதமே! வந்தருளுவாயாக! வந்தருளுவாயாக! (தொடரும்)

# எட்டாந் திருமுறை யாது?

"சித்தாந்தவித்தகர்" கயப்பாக்கம்
**திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள்,**
சென்னை.

சென்னையிலும், சுற்றுப்புறங்களிலும், ஏன்? தமிழ் நாடு முழுவதிலுமே, சைவர்களது பிரமாண நூல்களான சைவத் தெய்வப் பன்னிரு திருமுறைகளை ஆண்டுதோறும் யானையின் மீதோ அன்றி யானை வாகனத்தின் மீதோ ஏற்றி அலங்கரித்துத் தேவார படனங்களுடன் திருவிழாக் கொண்டாடி வருவது கண்கூடு. இன்னும் சில இடங்களில் இவ்விழாவிற்கு அங்கமாகச் சைவப்புலவர்களைக் கொண்டு திருமுறைகளின் சிறப்புக்களையும் சொற்பொழிவுகளையும் ஆற்றச்செய்து மக்களை மகிழ்வித்து வருவதையும் பலர் அறிவர்.

இத்தகைய திருவிழாக்களுள் ஒன்றில் அடியேன் பங்கு கொண்டு எட்டாந் திருமுறையைப்பற்றி விளக்கஞ் செய்யுமாறு சென்றிருந்தேன். அங்கு அன்று நிகழ்ந்த செய்தி ஒன்றை அன்பர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதனைச் சைவப்பெருமக்கள் நன்ருய்க்கவனித்துத் தங்களுக்குத் தெரிந்ததையும் இப்பத்திரிகை மூலமாகவே எழுதி உபசரிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். நான் பேசத் தொடங்குமுன் பன்னிரு திருமுறைகள் யாவை என்பதனையும், திருமுறைகளின் தெய்வத் தன்மையினையும், அவ்வருட் பாடல்கள் இந்த இருபதாம் நூற்ருண்டிலும் ஓதுவார்க்கு அவ்வப் பதிகங்களில் கூறியுள்ள பயனைத் தந்து வருகின்றன என்பதனையும் அழுத்தம் திருத்தமாகக் கூறினேன். அதன் சுருக்கத்தையும் பின்னர்க் குறித்துள்ளேன்.

திருமுறைகள் என்ருல், உயிர்களுக்கு உறுதி பயக்கும் வகையில் சிவபெருமானது திருவருளைப் பெற்ற அருளாளர்

களால் உலக உபகாரமாக அருளிச் செய்யப் பெற்று ஒழுங்காக வகுக்கப் பெற்ற அருள் நூல்கள் ஆம் என்று சொல்லிப் பின்னர்த் திருமுறைகள் பன்னிரண்டினையும் விளக்கினேன். திருமுறை கண்ட புராணத்தில் ஸ்ரீ உமாபதி சிவாசாரிய சுவாமிகள் அருளியுள்ள 25, 26, 27, 28, 29, செய்யுட்களையும் சொன்னேன். அவை: திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிச் செய்து நமக்குத் தற்போது கிடைத்துள்ள 384 பதிகங்கள் கொண்டவை முதல் மூன்று திருமுறைகள். திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய நமக்குக் கிடைத்துள்ள திருப்பதிகங்கள் 313 ஆகும். இவை நான்கு ஐந்து ஆறுந் திருமுறைகள் ஆம். சுந்தர மூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்து தற்போது கிடைத்துள்ள பதிகங்கள் நூறும், ஏழாந் திருமுறையாம். பின்னர் திருவாதவூர்ச் சிவபாத்தியன் அருளிச் செய்து நமக்கு முழுவதுமே கிடைத்துள்ள திருவாசகம் 656 பாடல்களும், திருச்சிற்றம்பலக் கோவையார் 400 பாடல்களும் எட்டாந் திருமுறையாம். பின்னர் திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்திநம்பி காடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகிய ஒன்பதின்மர் அருளிச் செய்த 29 பதிகங்கள் கொண்ட திருவிசைப்பா, திருப்பல்லாண்டும் சேர்ந்து ஒன்பதாம் திருமுறையாகும். அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவராகிய திருமூலதேவர் அருளிச் செய்த 3050 திருமந்திரப் பாடல்களும் பத்தாந் திருமுறையாகும். இனித் திருவாலவாயுடையார், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர் கோன், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீரதேவர், கல்லாடர், கபிலதேவர், பரணதேவர், இளம் பெருமானடிகள், அதிராவடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி ஆகிய பன்னிருவர் அருளிச் செய்த 40 பிரபந்தங்கள் கொண்டது பதினொராந் திருமுறையாகும். மந்திரங்கள் பஞ்சப் பிரமம், ஷடங்கம் ஆகப் பதினொன்றுதலால் திருமுறைகளும் பதினொன்றாக வகுத்தனர் என்பர் திருமுறை கண்ட புராண ஆசிரியர்.

பின்னர் அநபாயசோழன் என்னும் இரண்டாவது குலோத்துங்கன் காலத்தில் அவருக்கு முதலமைச்சராகத் திகழ்ந்த தெய்வச் சேக்கிழார் பெருமான் அரசன் வேண்டுகோளுக்

கிணங்கத் தில்லை சென்று ஸ்ரீ நடராஜப் பெருமான் திருவருள் துணைகொண்டு, சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருத தொண்டத் தொகையினையும், அதற்கு வகை நூலாக அமைந்த பதினொராந் திருமுறையில் விளங்கும் நம்பியாண்டார் நம்பிகள் அருள் பாடல்களான திருத்தொண்டர் திருவந்தாதிப் பாடல் களையும் ஆதாரமாகவும் மூல நூல்களாகவும் அமைத்துக் கொண்டு விரிநூலாகத் திருத்தொண்டர் புராணத்தை யருளிச் செய்தார். இதுவும் "தோடு செய்த திருநெறிய செந்தமிழோ டொக்கும் என்று உரை செய்து" இதனைப் பன்னிரண்டாந் திரு முறையாக வகுத்துச் செப்பேடு செய்து தமிழ் வேதத்தைப் பூர்த்தி செய்து வைத்தனர் என்பர் அறிஞர். இதற்கு ஒரு சான்று: திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த முதல் திருப்பதிகம், முதல்பாட்டு, முதல்மொழி, அதிலும் முதல்எழுத்து த் + ஓ = (தோடு) ஆக விளங்குகிறது. பிரணவத்தின் முதல் எழுத்து ஓ என்பதனை யாவர் அறியாதவர்? அடுத்துச் சேக் கிழார் சுவாமிகள் அருளிச்செய்த பெரிய புராணத்தின் கடைசிப் பாட்டு, கடைசி வார்த்தை, கடைசி எழுத்து ம் என்ப தனையும் அறிஞர் அறிவர். பிரணவத்தின் கடைசி எழுத்து ம் என்பதும் யாவரும் அறிந்ததே. எனவே திருமுறைகள் பன்னி ரண்டும் கொண்ட தமிழ் வேதம் ஓ வில் ஆரம்பித்து ம் இல் முடி வதால் பிரணவமயம் என்று விளங்கும். வடமொழி வேதமும் தமிழ் வேதமாக விளங்கும் பன்னிரு திருமுறைகளும் தம்முள் ஒக்கும். படனம் செய்வோர்க்கு ஒரேபயனைத்தரும். ஒன்று அதிபரமாப்தரான சிவபெருமானால் அநாதியே அருளிச் செய்யப் பெற்றது. மற்றது சிவபெருமானது திருவருளைப் பெற்றுப் பதிகரணங்களுடன் கூடிய அருளாளர்களால் அருளிச் செய்யப் பெற்ற திருமுறைகளாகும். எனவே ஆரிய வேதமும் தமிழ் வேதமும் பலவகையிலும் ஒக்கும் என்று விளக்கஞ் செய்தேன். வேறு விஷயங்களை விட்டு விட்டு எட்டாந் திருமுறை பற்றி அங்கு நிகழ்ந்ததை மட்டும் சுருக்கமாகக் கூறி முடிக்கிறேன்.

அந்தச் சைவ நண்பர்: "திருமுறைகண்ட புராணத்துள் 26 ம் திருப்பாட்டில் ஸ்ரீ உமாபதி சிவாசாரியார் ................... "அருட்டிருவாசக மொன்று" என்றும், திருத்தொண்டர் புராண வரலாற்றில் 96ம் பாட்டில் "திருவாதவூரர் முறை ஒன்று"

என்றும் தானே கூறியுள்ளார்கள். ஆதலால் மணிவாசகர் அருளிச்செய்தது தானு திருக்கோவையாரும்" என்றனர்.

நான்: கடவுண்மா முனிவர் அருளிச் செய்த திருவாதவூரர் புராணத்துள், மணிவாசகர் திருவாசகம் 656 பாடல்களையும் வரிசையாகச் செல்லிவர ஸ்ரீ நடராஜப் பெருமான் அவற்றை எல்லாம் தன் திருக் கரத்தால் ஏடும் எழுத்தாணி கொண்டு எழுதிக் கொண்ட பின், அத் திருவாசகம் 51 பிரபந்தங்களுள் ஒன்ருன திருவெம்பாவையை அதிகமாக விரும்பிய நடராஜப் பெருமான் மணி வாசகரை நோக்கிப் "பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக" என்றும் கேட்டதாகக் கூறப்பட்டிருக்கிறதே; அதனுல் இவர் திருமுறை இரண்டு பிரபந்தங்களும் சேர்ந்தது தான் என்றும், சைவ எல்லப்ப நாவலர் அவர்களும் தம் புராணம் ஒன்றின் மணிவாசகர் துதிப் பாட்டில் "தேனூறு வாசகங்கள் அறுநூறும், திருக்கோவை நானூறும்" என்றும் கூறியுள்ளார்கள்; ஆதலால் எட்டாந் திருமுறை இவ்விரண்டு அருணூல்களும் சேர்ந்தது தா" னென்றேன்.

நண்பர்: "இவையிரண்டும் பலத்த பிரமாணங்களாக நான் எப்படி ஒப்புக் கொள்வது" என்ருர்.

நான்: "நமக்குப் பிரமாணமாகவுள்ள திருமுறைகளுள் சான்று காட்டினுல் ஒப்புக் கொள்வீர்களா" என்றேன்.

அவர்: "தமிழ் வேத வாக்குக்களை ஒப்புக் கொள்ளாதவர் சுத்த சைவரா? காட்டுங்கள்" என்ருர்.

நான்: பதினென்ருந் திருமுறையில் உள்ள 40 பிரபந்தங்களுள் ஒன்றும், நம்பியாண்டார் நம்பிகள் அருளிச் செய்ததும், கோயில் திருப்பண்ணியர் திருவிருத்தம் என்றழைக்கப்படுவதுமான பிரபந்தத்தின் ஒரு பாட்டில் பின் வருமாறு கூறியுள்ளதைச் சொன்னேன்:

"வருவா சகத்தினின் முற்றுணர்ந் தோனைவண் டில்லைமன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண் டேயுமற் றப்பொருளைத்
தெருளாத வுள்ளத் தவர்கவி பாடிச் சிரிப்பிப்பரே."

உடனே அந்நண்பரும் நன்றி தெரிவித்துக் கொண்டு தன் தவருன கருத்தை மாற்றிக் கொண்டு விடை பெற்றுச் சென்ருர். இது நடந்தது சுமார் 20 ஆண்டுகட்கு முன்.

அண்மையில் நடந்த நிகழ்ச்சி ஒன்று இவ்வுண்மையை மேலும் வலியுறுத்துகிறது என்பதனையும் இங்குக் கூறி விடுவது பொருத்தமென எண்ணி அதனையும் கூறி விடுகிறேன்.

21—8—66 அன்று திருமயிலைத் திருக்கபாலீச்சரத்தில் திருமுறைவிழா மிகச் சீரும்சிறப்புமாக நடைபெற்றது. அதற்கு அங்கமாக அத்தேவஸ்தான அறங்காவலர்கள் மக்கள் நலன் கருதித் திருமுறைப் பெருமைகளை எல்லாம் பல அறிஞர்களைக் கொண்டு விளக்கம் செய்யவும் ஏற்பாடு செய்தார்கள். அவர்களுள் ஒருவர் என் மதிப்பிற்குரிய நண்பர், கல்வெட்டு ஆராய்ச்சித்துறையில் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் பல்லாண்டுகள் அரிய சேவை செய்து ஓய்வு பெற்றவர்; திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனக் கயிலைக் குரு மகா சந்நிதானம் அவர்களின் நல்லாசியினைச் சிறப்பாகப் பெற்று விளங்குபவர்; திருவையாற்றைச் சேர்ந்த சிவபூசாதுரந்தரர்; தற்போது சென்னையில் ஷி துறையிலேயே கண்ணும் கருத்துமாக உழைத்து வருபவர்; இவை எல்லாவற்றிற்கும் மேலாகக் கற்றுத் தெளிந்து மிக மிக அடக்கமாகவும், பணிவாகவும் நல்லொழுக்கத்துடனும் வாழ்ந்து வருபவர்; திரு. சுந்தரேசவாண்டையார் அவர்கள். இவர் தம் அரிய பேச்சில் தாம் கேட்ட ஒரு உண்மையினைப் பின்வருமாறு எடுத்துரைத்தார்கள். மக்கள் மட்டில்லா மகிழ்ச்சியில் திளைத்தனர் என்று கூறுவது மிகையாகாது.

சேலம் ஜில்லாவில் தொகூர் என்ற சிற்றூரில் உள்ள மணிவாசகப் பெருமான் திருவுருவத்தின் இடது திருக்கரத்திலுள்ள சுவடியில் திருக்கோவையார், முதற் பாடலானது மிகச் சிறிய எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது என்ருர். இதனைப் பூதக்கண்ணுடி கொண்டு பார்த்தால்தான் முழுப் பாடலையும் காண முடியும் என்றும் சொன்ஞர்.

"திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள் கொண் டோங்குதெய்வ

மருவளர் மாலையோர் வல்லியி னெல்கி யனநடைவாய்ந்து
உருவளர் காமன்றன் வெற்றிக் கொடிபோன்று ஒளிர்கின்றதே."

[குறிப்பு:- முதலடி நல்ல விளக்கமாகத் தெரிகின்றது என்றும், மற்ற அடிகளைப் பூதக்கண்ணுடி துணை கொண்டு தாம் பார்த்த தாகவும் திரு. வாண்டையார் அவர்களுடன் வந்து சிறப்பித்த அத்துறையில் வல்லவரான அந்தணர் ஒருவர் கூறக் கேட்டதை நாம் எவ்வாறு கூருமல் இருக்க முடியும்?]

ஆதலால் எட்டாந் திருமுறை திருவாசகமும் திருக் கோவையாரும் கொண்டது தான் என்று கூறி முடிக்கின்றேன்.

---


திருமுறை நண்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

**சேக்கிழார் சுவாமிகள் அருளிய**

**★ பெரிய புராணம் ★**

**(பன்னிரண்டாம் திருமுறை)**

*[புதிய பதிப்பு]*

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் 276-வது குருபூசைத் திருநாள் நினைவு வெளியீடு

952 பக்கங்கள் கொண்டது. (26 + 926)

உயர்ந்தரக வெள்ளைத்தாளில் பெரிய எழுத்தில் தெளிவாக அச்சிடப்பெற்றது.

★ பிரதி ரூ. 3-00 ★

(தபால் கட்டணம் வேறு)

ஒரே சமயத்தில் 20 பிரதிகளுக்குமேல் வாங்குவோருக்கு 20% கழிவு.

இடைக்குமிடங்கள் :-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில்,
ஸ்ரீவைகுண்டம் — (திருநெல்வேலி ஜில்லா)

2. "தியாகராச விலாசம்"
53, பிள்ளையார் கோயில் தெரு, திருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

# சுந்தர மூர்த்தி சுவாமிகளின்
# அற்புதத் திருப்பதிகங்கள்
## Hymns of St. Sundarar

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

---

### Tiruttondattogai

திருத்தொண்டத்தொகை பண்: கொல்லிக்கௌவாணம்

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 10

I am the slave of the devotees and I serve the poets who sing the praise of my Lord, Parameswara. I am the servant of those, who meditate on Siva, and all the people born at Tiruvarur.

I serve all the priests who worship at the temples and those who have besmeared themselves with the sacred ash.

And I, the servant of the Lord at Arur, am the slave of all the devotees, past, present and future, the devotees of this country and beyond, the devotees of Saivism and all other religions, of my language and others, too.

(To be continued)

# மூவர் தமிழ் விருந்து

திரு. கற்குடி மாமலையார் அவர்கள்

கற்குடி மாமலையின்கண் எழுந்தருளிய கண்ணுதற் கடவுளை, ஆலமுண்ட நீலகண்டனைத் தொழுது நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தப் பெருமான் பாடினார். ஆலத்தை அமுதாக உண்டு அமரரை உய்யக்கொண்ட ஈசனின் பெருங் கருணையை எண்ணி எண்ணி வியந்தார். அமுது எழும் என்னும் ஆர்வத்துடன் அமரர்கள் திருப்பாற்கடலைக் கடைந்தார்கள். முழு முதல் இறைவனாகிய சிவனைத்தொழுது கடையத் தொடங்காமல் தம் முனைப்புடன் தொடங்கினார்கள். அமுதை உண்டு சாவாமல் வாழலாம் என்ற எண்ணத்தினால் ஈசனின் அருளை மறந்து விட்டார்கள். அமுதம் எழவில்லை. ஆலகாலவிடம் என்னும் நஞ்சம் எழுந்தது. நஞ்சைக்கண்ட அமரர்கள் நடுங்கினார்கள், நஞ்சின் வேகத்தைத் தாங்க முடியாமல் அஞ்சி ஓடினார்கள். ஈசன் திருமுன்னிலையை அடைந்து "எங்களைக் காத்தருளவேண்டும்" என்று கதறினார்கள். அமரர்களின் அல்லலையும் ஆலகால விடத்தின் வேகத்தையுங் கண்ட ஈசன் ஆலத்தை அமுதாக உண்டு அமரரைக் காத்தருளினார். இவ்வாறு ஆலமென்னும் கொடிய நஞ்சை அமுதாகத் தாம் உண்டு அமரரைக் காத்த ஈசனின் இன்னருளை எண்ணிய திருஞானசம்பந்தர்,

ஒருங்கு அளிநீ இறைவா என்று
உம்பர்கள் ஓலிடக் கண்டு
இருங்களம் ஆர விடத்தை
இன்னமுது உண்ணிய ஈசர்

எனப் போற்றுகின்றார்.

---

*'சிவதொண்டன்' ஆசிரியர் அனுமதி பெற்று இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.*

## உம்பர்கள் ஓலிட

இறைவனை மறந்த அமரர்கள் நஞ்சின் வெம்மையைத் தம் மால் தாங்க முடியாத நிலையிலே தான், இறைவனை எண்ணினார்கள். "அமரர்கள் எல்லோரும் அழியப் போகின்றோம். இறைவனே,இனி உமது இன்னருள் தான் எமக்குப்புகல். அமுதத்தை உண்டு அழிவில்லாமல் வாழலாம் என்று மகிழ்ந்தோம். ஆலம் என்னும் கொடிய நஞ்சம் எழுந்து எம்மை நலிகின்றது. திருவருளை முன்னிட்டுத் தொடங்காத எமது பிழையைப் பொறுத்தருள்க; எமது இன்னலைப் போக்கியருள்க" என்று புலம்பினார்கள்; ஓலமிட்டார்கள். அமரர்கள் அஞ்சி ஓலமிட்டு அடைக்கலம் புகுந்தவுடன் இறைவன் இரங்கிவிட்டார். ஆலமென்னும் கொடிய நஞ்சை அள்ளி அமுதம் போல் உண்டார்.

ஒருங்களிநீ இறைவா என்று
உம்பர்கள் ஓலிடக்கண்டு

என்னும் தொடர்களால் அமரர்கள் அஞ்சி அலறி ஓலமிட்ட அல்லல் நிலையை அப்படியே சம்பந்தப் பெருமான் உணர்த்துகின்றார்.

'இறைவா! நீ ஒருங்கு அளி' என்பதால் நாங்கள் "நீர் தான் முழுமுதல் இறைவன் என்பதை உணர்ந்து விட்டோம்; நீர்தான் எங்களைக் காப்பாற்றி யருளும் கருணையாளன்" என அமரர்கள் தம் தன்மைகெட்டு இறைவனிடத்தில் தம்மை ஒப்படைக்கின்ற, தான் அதுவாம் தரத்தைக் காண்கின்றோம்.

உலகப் பற்றில் மூழ்கி, இறைவனின் திருவருளை மறந்து, போகப் பொருளைப் பெறுதற்காக மக்கள் முயலுகின்ற நிலையை, அமரர்கள் அமுதத்தைப் பெறும் வண்ணம் திருப்பாற்கடலைக் கடைந்த செயல் குறிப்பாகக் காட்டுகின்றது. இன்பமெனத்தாம் எண்ணி முயன்று அடைந்த உலக போகங்கள் யாவும் திருவருளை மறத்தற்கு ஏதுவாகித் துன்பந்தருதலை உணர்ந்து, இறைவனின் அருளைப் பெற்று உய்வடைய முயலும் மக்களின் நிலையை, ஆலத்தைக் கண்டு அஞ்சி இறைவனிடம் அடைக்கலம் புகுந்த அமரர்களின் செயல் குறிப்பாகக் காட்டுகின்றது.

அமரர்களின் அல்லலைக் கண்டு ஆலத்தை அமுதாக உண்டருளிய இறைவனின் அருட் செயலைப் பாலருவாயராகிய ஞான சம்பந்தப் பெருமான் பாடிப் பாடி வியக்கின்றார்.

இருங்களம் ஆர விடத்தை
இன்னமுது உண்ணிய ஈசர்

ஆலமுண்ட ஈசனின் திருக்கழுத்து நிறைந்த நீலநிறமாகவே விளங்கியது. அல்லற்பட்டு ஆற்றாது அடைக்கலம் புகும் ஆர் உயிர்களின் அல்லலைப் போக்கி அருள்புரியும் அருள் வள்ளல் ஈசன் என்பதை, ஆலம் தோய்ந்த நீலகண்டம் அறிவிக்கின்றது. நீலமணி மிடற்று ஒருவன் என ஒளவையார், ஈசனைப் போற்றுகின்றார். நஞ்சை அமுதாக உண்டவன் என்பதால், தம்மைப் புகலாக வந்தடைந்த ஆருயிர்களின் வினை நுகர்ச்சியைக் கெடுத்துப் பேரின்பம் அருள்பவன், என்னும் உண்மையும் குறிப்பாகத் தோன்றுகின்றது. இன்பமே உருவாகிய இறைவன், தம்மையே புகலாக வந்தடைந்த ஆருயிர்களின் அல்லலைப் போக்குவதால் தானும் ஓர் இன்பமடைகின்றான் எனக்கூறி நயக்கத்தக்க சிறப்பும்,விடத்தை இன்னமுது உண்ணிய ஈசன் என்னும் தொடரில் அமைந்துள்ளது.

"தந்தது உன்தன்னைக்
கொண்டது என்தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றது என்பால்"

என்பது திருவாசகம். இறைவன் ஆருயிர்களின் வினை நுகர்ச்சியைக் கெடுத்தும் தான் அவ்வினையால் தாக்குண்ணாது நிற்கும் பேராற்றல் உடையவன். "வினையில் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்"

"விண்ணோர் அமுதுண்டும் சாவ ஒருவரும்
உண்ணாத நஞ்சுண்டு இருந்தருள் செய்குவாய்"

என்பது சிலப்பதிகாரம்.

இங்ஙனம் கற்குடிமலையில் எழுந்தருளி யிருக்கும் ஈசனின் பெருங் கருணையை வியந்து பாடிப் போற்றிய சம்பந்தர் கற்குடி மலைச்சாரலை நோக்கினார். அங்கு, ஆலத்தை உண்டு அமரர்க்கு ஆரமுதை அருளிய ஈசனின் அருட்செயலிலும் உயர்ந்ததோர் செயலைக் கண்டார். கண்டதும் களிபேருவகை கொண்டார்.

கற்குடி மலைச்சாரலிலே களிறும் பிடியுமாக யானைகள் களித்து வாழ்ந்தன. ஒரு களிற்று யானையின் பக்கத்திலே பிடி ஒன்று நின்றது. களிறு மிகவும் மதம் கொண்டது. ஆனால் அந்த மதக் களிறு தன் காதற் பிடியாகிய பெண்யானைக்காகவே வாழ்கின்றது. தன் காதற்பிடியின் இன்பமே தன் இன்பமாகக் கொண்டுவிட்டது. தன் தன்மை கெட்டுக் காதற் பிடியின் தன் மையாகவே மாறிவிட்டது. மலைச்சாரலிலே மூங்கில் முளைகள் காணப்பட்டன. களிறு அந்த மூங்கில் முளைகளைத் தனது கையால் வாரிவாரிப் பிடிக்கு ஊட்டுகின்றது. பிடி உண்பதைக் கண்டு உயிர் தளிர்க்கின்றது. மீண்டும் மீண்டும் வாரி வாரி ஊட்டுகின்றது. தான் உண்ணவே இல்லை, தன்னை மறந்து விட்டது. தான் அதுவாந்தரத்தை அடைந்துவிட்டது.

ஆலத்தை அமுதாக உண்டு அமரரைக் காத்த ஈசன் எழுந் தருளி இருக்கும் கற்குடிமலையில் வாழும் களிறு, இன்னருளால் ஈசனையே வென்றுவிட்டது என்பதை உணர்ந்தார்; வியந்தார்.

மருங்குஅளி யார்பிடி வாயில்
வாழ் வெதிரின்முளை வாரிக்
கருங்களி யானை கொடுக்கும்
கற்குடி மாமலை யாரே

எனப், பாடிப் போற்றினார்.

மருங்கு அளியார் பிடி

களிற்றின் பக்கத்திலே நிற்கின்ற பிடியை நோக்கினார். அந்தப் பிடி களிற்றின்மேல் வைத்த அன்பே உருவமாக நிற் கின்றது. பிடி, களிற்றையே எங்கும் காண்கின்றது. அதற்குப் பார்த்த இடமெல்லாம் நீக்க மறத் தன் அன்புத்தலைவனாகிய களிறே காணப்படுகின்றது. அன்புநிறைந்த பிடியின் அல்லலைப்

போக்கி ஆதரித்தல் ஒன்றையே தன் கடனாகக்கொண்ட களிறு, கருணையே உருவமாகக் காட்சியளிக்கின்றது. பிடியின் அயரா அன்பைக் கண்ட சம்பந்தர் அளி ஆர் பிடி என்று பாராட்டு கின்றார். களிறு எங்குச் சென்றாலும் அகலாமல் அதனையே புக லாகக்கொண்டு அதன் மருங்கிலேயே நிற்கின்ற பிடியைச் சம்பந்தரால் மறக்கவே முடியவில்லை. அன்பினால் அல்லவா பிடி, களிற்றின் அருளைப் பெறுகின்றது என, எண்ணுகின்றார். அன்பு அருளைப் பெற்றுவிட்டது. அன்பு ஈன் குழவி அருள் என்பது திருக்குறள்.

## கருங்களி யானை

களிறு மதம் மிக்கது. ஆணவங்கொண்டது. அதன் மதச் செருக்கெல்லாம் பிடியின் அன்பினால் அடங்கிவிட்டது. பிடியின் அன்புப் பிடியிலே களிறு தன் ஆணவத்தன்மை அற்று விட் டது. அருளால் நிறைந்த களிறாக மாறிவிட்டது. அன்பினால் பண்பட்டு அருளால் நிறைந்த கருங்களியானையாகிய களிறு, நல்ல மூங்கில் முளைகளை வாரி, வாரிப் பிடியின் வாய்க்குள் வைத்து ஊட்டுகின்றது. தன் பசித்துயரை மறந்தேவிட்டது. தான் என்பது அற்றுவிட்டது கற்குடி மலையில் எழுந்தருளி யிருக்கும் கருணைக் கடலாகிய ஈசனிலும், களிற்றின் கருணை கூடிவிட்டது. களிறு, தன் துன்பத்தை மறந்து, தன் அன்புப் பிடியின் துன்பத்தைப் போக்குதலையே பெரிதாக மதித்தது. களிறு ஒரு மூங்கில் முளையையேனும் உண்ணவில்லை. கற்குடி மலையில் எழுந்தருளிய ஈசன், நஞ்சையேனும் உண்டார். கற் குடி மலைக்களிறு, தன் அன்புப் பிடியின் பசியைப் போக்குதலே தன் பசியைப் போக்குதலாகக் கருதிவிட்டது.

## பிடிவாயில் கொடுக்கும்

பிடியின் வாயில் மூங்கில் முளைகளை வாரி வாரி வைத்த வண்ணமாகவே, களிறு நிற்கின்றது. கொடுத்தலே அன்றிக் கொள்ளுதலில்லை. ஈசனும் அன்பினால் தம்மை அடைந்த ஆருயிர்களுக்கு, இன்பத்தை அளித்தலேயன்றி அவ்வுயிர் களிடம் தான் இன்பத்தை அடைதல் இல்லை நஞ்சை உண்டு அமரர்க்கு அமுதை அளித்த கற்குடிமலைக் கடவுளின் கருணைச்

செயலினும் பார்க்கத்தான் உண்ணுமல் மூங்கில் முளையை வாரி வாரிப் பிடிக்கே ஊட்டிய கற்குடிமலைக் களிற்றின் செயல் விஞ்சி விட்டது. எனவே கருங்களி யானை, மருங்கு அளியார் பிடி வாயில் வாழ்வெதிரின் முளையை வாரிக் கொடுக்கின்ற கற்குடி மாமலையில், ஈசன் எழுந்தருளியிருப்பதினுல் தான், பெருமை அடைகின்ருன். தான், நஞ்சையுண்டு அமரர்க்கு அமுதளித்த செயலினும் விஞ்சிய அருட் செயலை உடைய களிறு வாழ்கின்ற, கற்குடி மலையில் எழுந்தருளியிருப்பதைக் குறித்து ஈசனும் உவகை எய்துகின்ருன.

ஒருங்களி நீஇறை வாஎன்று
உம்பர்கள் ஓலிடக் கண்டு
இருங்களம் ஆர விடத்தை
இன்னமுது உண்ணிய ஈசர்
மருங்கு அளியார் பிடி வாயில்
வாழ்வெதி ரின்முளை வாரிக்
கருங்களி யானை கொடுக்கும்
கற்குடி மாமலை யாரே.

[ஒருங்கு-எங்கள் எல்லோரையும். அளி-காத்தருள்க. உம்பர்கள்-தேவர்கள் இருங்களம்-பெரிய கழுத்து. விடம்-நஞ்சு. உண்ணிய-உண்ட. மருங்கு-பக்கத்தில். அளி-அன்பு. வாழ்-வளர்கின்ற. வெதிர்-மூங்கில். கரும்-கரிய. களி யானை-மதம் பொருந்திய களிறு.]

இத்திருப் பாட்டில் ஈசனின் இன்னருளைக் களிறும் பிடியுங் கலந்த அன்பு வாழ்வில் வைத்து அருள்வள்ளலாகிய சம்பந்தர் எமக்கு, உணர்த்துகின்ருர். ஓர் உயிர் தன் இன்பத்தை இன்ஞேர் உயிருக்காக ஈந்து, தான் இன்பமே எந்நாளும் துன்பமில்லை யென்றநிலையில் வாழ்கின்ற பொழுதுதான் அருளைக் காண்கின்றது. மிக்க மதங்கொண்ட களிறு, மூங்கில் முளையைக் கண்டவுடன் தான் உண்ணவில்லை. தன் மருங்கில் நின்ற தனது அன்புப் பிடியின் வாய்க்குள் மூங்கில் முளையை வாரி வைத்து ஊட்டியது. மதங் கொண்ட மால்யானை, மூங்கில் முளையை வாரித் தானுண்ணுமல், அன்பார் பிடியுண்ண அள்ளி ஊட்டிய அருட் செயலைக்கண்ட திருஞானசம்பந்தர் சிந்தை மகிழ்ந்தார். நஞ்சைத்தாம் உண்டு, அமரர்க்கு அமுதம் அளித்

தருளிய ஈசனின் செயலைக் களிற்றின் செயல் நினைவூட்டியது. உடனே கருங்களிமால் யானையையும் கற்குடி மாமலையாரையும் ஒருங்கு வைத்துப்பாடி உவந்தார்.

ஈசனின் இன்னருளை, அஃறிணை உயிர்களாகிய களிறும் பிடியும் கொண்ட காதல் வாழ்வு அணிசெய்கின்றது; அன்பு, அகன்று அருளாக அருளாக மலர்ந்து பேரின்பப் பெருவாழ்வை வழங்கிவிடும் என்பதை இதனால் தெளிகின்றோம். களிறு, தன்னை முற்றுகப் பிடியின அன்புக்கே ஒப்படைத்துத் தான் அதுவாகநின்ற தன்மை போல் ஆருயிர்களும் தம்மை முற்றுக இறைவனிடமே ஒப்படைத்துத், தம் தன்மைகெட்டு, இறைவனின் தன்மையாக மாறி, அவன் அடி நிழற்கீழ் பேராவியற்கைப் பேரின்பம் நுகர்ந்து, வாழ்தல் வேண்டும், என்பதே இதனுற் போந்த குறிப்பாகும்.

ஒற்றை யாழியங் கடவுளர் வைகலி லுணவொழிந் துதயம்போய்
முற்று கங்குலின் யாமமோர் நான்கினு முறைதுயில் போக்கிக்
கற்றை யஞ்சடைக் கடவுளை விதிமுறை யருச்சனைக் கடனுற்றிப்
பிற்றை வைகலிற் பாரணங் கூட்டுவார் பெறற்கருங் கதிசேர்வார்

— உபதேசகாண்டம்.

---

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத்தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்.

உள்நாடு ரூ. 3 - 00 * வெளிநாடு ரூ. 4 - 00

செயலாளர், "ஞானசம்பந்தம்" அச்சகம்,

தருமபுரம். மாயூரம் P. O.

# இதுவே உண்மை!

திரு. சா. முருகானந்தம் அவர்கள்,
வித்துவான் நிறைநிலை, செந்தமிழ்க் கல்லூரி,
திருப்பனந்தாள்.

உலகத்து மனிதர்செய் கொடுமை காணின்
உயர்குணனே! சிவனே!நீ உளங்கொ தித்து
நிலநடுக்க வடிவாகி அழிவு செய்வாய்
நெடுங்கடலின் அலைவீச்சாய்க் கொந்த ளிப்பாய்
பலமான புயற்காற்றாய் உருவெ டுத்துப்
படுசேதம் விளைவிப்பாய்; எரியைக் கக்கும்
மலைமுகட்டில் புகைந்திடுவாய் அனல்உ மிழ்வாய்
மனம்நடுங்கும் பலகேடு சூழ்வாய்; ஆனல்

ஞாலத்தார் செய்கின்ற நன்மை கண்டால்
நனிமகிழ்வாய்ப் பெருஞ்செல்வங் கொடுப்பாய்; அங்கே
காலமழை தவறாது பொழிய வைப்பாய்
கவின்நிலவாய் ஒளிதருவாய்; அழகு செய்வாய்;
கோலமிகும் எழிற்காட்சி கூட்டி, மிக்க
கோடையிலும் குளிர்தென்றல் இனிமை ஈவாய்
நீலவான் நெடுந்திரையில் மறைந்து கொண்டு
நிகழ்த்துகிறாய் இத்தகைய நாட கத்தை!

இதுவெல்லாம் நின்செயலென் றுணர்ந்தால், மாந்தர்
இறுமாப்புக் கொளமாட்டார்; இழிவு செய்யார்;
எதுசெய்த காலத்தும் 'நான்நான்' என்றே
ஏற்றமுடன் பேசியவர் திரிய மாட்டார்;
முதியவனே! மூலவனே! அருட்பெ ருக்கே!
முழுஞானப் பெரும்பொருளே! உன்னைப் போற்றிப்
புதுமுறையில் வாழ்வுதனைத் தொடங்கி வாழ்வார்;
பொய்யில்லை பெருமானே! இதுவே உண்மை!

# HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

---

[மலர் 17. இதழ் 9-ன் தொடர்ச்சி]

## III

## SUNDARAMURTI SWAMI

(Abbreviated as SUNDARAR)

73. ஓவுநாளுணர்வழியுநாளுயிர்போகுநாளுயர்பாடைமேற்
காவுநாளிவையென்றலாற்கருதேன்கிளர்புனற்காவிரிப்.
பாவுதண்புனல்வந்திழிபரஞ்சோதிபாண்டிக்கொடுமுடி
நாவலாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே.

73. When will the end draw nigh, sense fade, life
close, and I the bier ascend?
This, naught but this, is all my thought. But,
lord of speech. Thou light on high,
Where the bright streams of Kaviri to Kodumudi
coolness lend,
Should I forget Thee, my own tongue to Thee
would loud 'Hail, Siva' cry.

(To be continued)

---

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N.B. Copies available for sale at the above Press.)

# சிறு பாணன் சென்ற வழி

திரு. மு. வை. அரவிந்தன் அவர்கள் எம். ஓ. எல்.,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

சங்க இலக்கியத்தில், பழந்தமிழ்ப் புலவர்களால் குறிப்பிடப்படும் நாடு, நகர், ஊர், மலை, ஆறு - ஆகியவற்றை நன்கு அறிந்து, இன்று அவை எங்கெங்கே உள்ளன என்பதைத் தரைப் படத்தில் குறித்து விளக்குவது சிறந்த ஆராய்ச்சிப் பணியாகும். அவ்வாறு செய்யின் தமிழக வரலாற்றை அறிவதில் மிகுதியான ஆர்வமும், பழந் தமிழ் நூற் பயிற்சியில் ஈடுபாடும் மக்களிடையே உண்டாகும். பழந்தமிழ்ப் பாடல்கள் குறிப்பிடும் இடங்களில் இன்று வாழும் மக்கள் அப் பாடல்களைப் போற்றிக் கற்பர்.

சிறுபாணாற்றுப் படையுடன் தொடர்புள்ள நாடு, நகர், ஊர் ஆகியவை இன்று எங்கெங்கே உள்ளன என்பதை அறிந்தபின், பாட்டைக் கற்கும்போது அவ்விடங்களைப் பற்றிய பகுதிகள் நம் நெஞ்சத்தில் நன்கு பதிகின்றன. பழந் தமிழ் நாட்டு இடப் பெயர்கள் கி. பி. 1200 வரை பெரும்பாலும் மாறாமல் வழங்கின என்னலாம். அக் காலத்திற்கு முற்பட்ட கல்வெட்டுக்களின் துணையால், சிறுபாணாற்றுப் படையுடன் தொடர்புள்ள இடங்களை அறிஞர் பலர் ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளனர். அவற்றை இங்கே விளக்கமாகக் காண்போம்.

'ஓய்மான் நாட்டு நல்லியக்கோடனை, இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடிய சிறுபாணாற்றுப்படை' - என்ற குறிப்பு, பாடப்பட்டோர், பாடினோர் ஆகிய இருவர்க்கும் உரிய நாட்டையும் ஊரையும் உணர்த்துகின்றன. இன்று தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள திண்டிவனம் வட்டமே முன்பு

ஓய்மான் நாடு என்று வழங்கிற்று. இவ் வட்டத்தில் உள்ள மரக்காணம், கிளியனூர், திண்டிவனம் – ஆகிய ஊர்க் கோயில் களில் இருக்கும் கல்வெட்டுக்கள் இவ் உண்மையைப் புலப் படுத்துகின்றன. மேலும் இவ் வட்டத்தில் மயிலத்திற்கு அருகே உள்ள ஓமந்தூர் என்பது ஓய்மானூர் என்பதன் திரிபு என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

நத்தத்தனர் நல்லியக்கோடனை மாவிலங்கை மன்னருள் சிறந்தவன் என்றும் (120 – 22), கிடங்கிற் கோமான் என்றும் (160) குறிப்பிடுகின்றார். நல்லியக் கோடனின் முன்னோர் மாவிலங்கை என்னும் நகரத்தைத் தலை நகராகக் கொண்டு ஆண்டனர் என்றும், பின் நல்லியக்கோடன் கிடங்கிலில் தங்கி ஆண்டான் என்றும் சிறுபாணாற்றுப் படையை ஊன்றிக் கற்றால் அறிய முடிகின்றது.

புலவர் நத்தத்தனர் வாழ்ந்த இடத்தை இனிக் காண்போம். இடைக்கழி நாடு என்பது செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள மதுராந்தகம் வட்டமாகும். இன்று அது எடக நாடு என்று மருவி வழங்குகின்றது. அவ் வட்டத்தில் இடைக்கழி நாடு - என்ற பெயருடைய ஊரும் உள்ளது. நல்லூர் என்ற பெயரோடு இன்று அவ் வட்டத்தின் தென் கோடியில் உள்ள ஊரே பண்டைய நல்லூர் என்பது ஆராய்ச்சியாளரின் முடிபாகும்.

சிறுபாணாற்றுப் படையில், எயிற்பட்டினம், வேலூர், ஆமூர், கிடங்கில், மாவிலங்கை – ஆகிய ஊர்கள் குறிப்பிடப் படுகின்றன. இவை யாவும் ஒய்மான் நாடாகிய திண்டிவனம் வட்டத்தில் உள்ளவையாகும். அவ்வூர்கள் இன்று இருக்கும் இடத்தை இனிக் காண்போம்.

**எயிற்பட்டினம்:** இது ஒய்மான் நாட்டில் கடற்கரை யோரமாக நெய்தல் நிலத்தில் இருந்த துறைமுகப்பட்டின மாகும். இப் பட்டினத்தை நத்தத்தனர்,

பாடல் சான்ற நெய்தல் நெடுவழி,
மணிநீர் வைப்பு, மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவின் பட்டினம் (151 – 53)

என்று குறிப்பிடுகின்றூர். மதில், எயில் என்பன ஒருபொருட் சொற்கள். எயிற்பட்டினம் என்பதை 'மதிலொடு பெயரிய பட்டினம்' என்று குறிப்பிடுகின்றூர் புலவர். இப் பட்டினத்தைச் சுற்றிலும் வலிமையான மதிற் சுவர் இருந்தது. ஆதலின இது எயிற்பட்டினம் பெயர் எனப்பெற்றது 'சோ'என்ற சொல் மதிலைக் குறிக்கும். அதனுல் எயிற்பட்டினம் சோபட்டினம் என்றும் வழங்கி வந்தது. தமிழகத்திற்குக் கி. பி. முதல் நூற்ருண்டில் அரபிக் கடல் வழியாய் வந்து, பெரிபுளூஸ் என்ற கடற்பயண நூலே இயற்றிய கிரேக்க ஆசிரியர் இப் பட்டினத்தைச் 'சோ பட்மா' என்று குறிப்பிட்டுள்ளார். சோபட்மா என்பது சோ பட்டினம் என்பதன் திரிபாகும்.

இன்று கடற்கரையோரத்தில் உள்ள மரக்காணத்திற்குக் கிழக்கே 5 கி. மீ. தொலேவில் பழைய எயிற்பட்டினம் இருந்திருக்க வேண்டும் என்றும், அது கடலுள் மூழ்கி இருக்க வேண்டும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். மரக்காணத்தில் உள்ள பூமீசுரர் கோயிற் கல்வெட்டு அவர்கள் கருத்திற்கு அரணுக உள்ளது.

வேலூர்: தமிழகத்தில் வேலூர் பல உண்டு. சிறுபாணுற்றுப்படை குறிப்பிடுவது உப்பு வேலூர் என்று வழங்கும் வேலூரேயாகும். இது கிளியனூருக்கு வடக்கே கழிவெளி ஏரிக் கரையில் சிற்றூராய் உள்ளது. 'ஓய்மான் நாட்டு வேலூர்' என்று இவ்வூரைக் கல் வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. நத்தத்தனுர்,

முல்லே சான்ற முல்லேயம் புறவின் .........
விறல் வேல் வென்றி வேலூர் (169 – 173)

என்று முல்லே நிலத்துடன் இணைத்து வேலூரைப் பாடியுள்ளார்.

ஆமூர்: திண்டிவனம் வட்டத்தில் இன்று நல்லாமூர், சித்தாமூர், கொண்டாமூர் – என்று மூன்று ஆமூர்கள் உள்ளன. அவற்றுள் நல்லாமூரே பழைமையான ஊராகும். அங்கே பழைமைக்குரிய சின்னங்கள் உள்ளன. அவ்வூரைச் சுற்றி மருத நிலமும் அகழியும் இருந்தன என்று சிறுபாணுற்றுப்படை குறிப்பிடுகின்றது.

மருதம் சான்ற மருதத் தண்பணை
அந்தணர் அருகா அருங்கடி வியனகர்
அந்தண் கிடங்கின், அவன் ஆமூர் (186 – 8)

நல்லாமூரே இன்று மருத நிலத்தில் உள்ளது. எனவே, அதுவே சிறுபாணாற்றுப்படை குறிப்பிடும் ஆமூராக இருக்க வேண்டும்.

கிடங்கில்: இதுவே நல்லியக் கோடனின் தலை நகரமாகும். ஆமூரிலிருந்து இவ்வூர் மிக அண்மையில் உள்ளது என்பதை,

அவன் சாறயர் மூதூர்
சேய்த்தும் அன்று; சிறிது நணியதுவே (201, 2)

என்று நத்தத்தனுர் குறிப்பிடுவதால் உணரலாம். கிடங்கில் பல விழாக்கள் நடக்கும் பெருநகராக விளங்கியது. அதன் தெருக்களில் யானைகள் மதநீர் ஒழுக உலவிக்கொண்டிருந்தன. இவற்றை,

அண்ணல் யானை அருவிதுகள் அவிப்ப
நீறடங்கு தெருவின்அவன் சாறயர் மூதூர் (200, 1)

என்ற அடிகளால் உணரலாம். கிடங்கில் என்ற சொல், பழந் தமிழ் நூல்களில் அகழியைக் குறிக்கின்றது. நல்லியக்கோடனின் தலை நகர், அகழியால் சூழப்பட்டுச் சிறப்பாக விளங்கினமையால் அந் நகர் கிடங்கில் எனப்பட்டது. நல்லியக் கோடன் குறிஞ்சிக் கோமான் (267) என்று குறிப்பிடப்படுகிருன்; ஆதலின் கிடங்கில் குறிஞ்சி நிலத்தில் இருப்பது புலனுகும். கிடங்கிலைச் சுற்றிலும் சோலைகள் இருந்தன என்பதைக் 'கிளைமலர்ப் படப்பைக் கிடங்கில்' (160) என்று கூறுவதால் அறியலாம். கிடங்கிலைச் சுற்றியிருந்த அகழி, அகழியில் வாழ்ந்த கயல் ஆகியவை பற்றிய வெண்பா ஒன்று, யாப்பருங்கல விருத்தியில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது (யாப்பருங்கல விருத்தி 1. பக். 350.)

இன்று திண்டிவனம் நகரத்தின் ஒரு பகுதியாக உள்ள 'கிடங்கால்' என்பதே பண்டைய கிடங்கில் ஆகும். அங்கே சிதைந்த அகழியும், இடிந்த கோட்டையும் இன்றும் காணப்

படுகின்றன. திண்டிவனத்தில் உள்ள திண்டீசுவரர் கோயிற் கல்வெட்டும் இதனை உறுதிப்படுத்துகின்றது. பிற்காலத்தில் திண்டீசுவரர் பெயரால் ஏற்பட்ட திண்டீசுவரம் என்ற நகர், திண்டிவனம் என்று மருவிக், கிடங்கிலையும் உள்ளடக்கி வளர்ந்து தன் பெயரை நிலை நாட்டி விட்டது.

**மாவிலங்கை:** இந் நகர், நல்லியக்கோடனின் முன்னோர் காலத்தில் தலைநகராக விளங்கியது. இந் நகரை,

நறுவீ நாகமும் அகிலும் ஆரமும்
துறையாடு மகளிர்க்குத் தோட்புணை யாகிய
பொருபுனல் தரூஉம் போக்கரு மரபின்
தொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா விலங்கை (116 – 120)

என்று நத்தத்தனார் பாடுகின்றார். "வெள்ளத்தில் மிதந்து வரும் நாகம், அகில், ஆரம், ஆகிய மரங்களைத் தோட்புணையாகக் கொண்டு மகளிர், மாவிலங்கையின் நீர்த்துறையில் நீராடு கின்றனர். பழைய இலங்கை நகரின் பெயரைத் தாங்கியுள்ள பெருமையும், அந் நகர் அமைந்த நல்ல வேளையில் அமைந்த சிறப்பும் மாவிலங்கைக்கு உண்டு" - என்று நத்தத்தனார் கூறி யிருப்பதால், ஓய்மான் நாட்டுத் தலை நகரம் கிடங்கிலுக்கு மாறிய பின்னரும் மாவிலங்கை சிறப்புடன் விளங்கிற்று என்று அறியலாம்.

இன்று மாவிலங்கை திண்டிவனத்திலிருந்து 15 கி. மீ. தொலைவில் வந்தவாசிக்குச் செல்லும் சாலையில் உள்ளது. மேல் மாவிலங்கை, கீழ் மாவிலங்கை என இரண்டு ஊர்கள் அங்கே உள்ளன. கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த டாலமி என்னும் கிரேக்க நிலநூல் ஆசிரியர் மாவிலங்கையை 'மேலங்கே' என்று குறிப்பிட்டுள்ளார்.

## பாணர் சென்ற வழி

பாணர்கள் இடைக்கழி நாட்டு நல்லூரிலிருந்து புறப்பட்ட தாய்க் கொள்ள வேண்டும். நல்லூரிலிருந்து புறப்பட்ட பாணர் கள், ஓய்மான் நாட்டிற்குள் புகுந்து, கடற்கரையோரமாகத்

தெற்கே நடந்து, நெய்தல் நிலக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்து, எயிற்பட்டினத்தை அடைந்தனர். அங்குப் பரதவர் தந்த உணவை உண்டு மகிழ்ந்து, அங்கிருந்து புறப்பட்டுத் தென் மேற்காக நடந்து முல்லை நிலத்தை அடைந்தனர். முல்லை நிலத்தில் இருந்த வேலூரில், எயினர் இல்லத்தில் விருந்தினராய்த் தங்கினர். பின் வட மேற்காகச் சென்று மருத நிலத்தை அடைந்து ஆமூரில் உழவரோடு உண்டு மகிழ்ந்தனர். ஆமூருக்கு அருகே தென் மேற்கில் குறிஞ்சி நிலத்தில் இருக்கும் கிடங்கிலை அடைந்து, நல்லியக்கோடனிடம் பரிசில் பெற்று மீண்டனர்.

இன்றுள்ள வழிகளில் பல முற்காலத்தில் இருந்திருக்க முடியாது. மரக்காணத்திலிருந்து நேர் மேற்கில் திண்டிவனம் செல்ல இன்று நல்லசாலை உள்ளது. இச் சாலை அக் காலத்தில் இல்லை. பிற் காலத்திலேதான் ஏற்பட்டது. அன்று இருந்த வழி, வழியில் இருந்த ஊர்கள், அவற்றின் வளம் ஆகியவற்றையே சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது.

---

## பன்னிரு திருமுறை

- 1 – 3 திருஞானசம்பந்தர் பாடியவை
- 4 – 6 திருநாவுக்கரசர் பாடியவை
- 7 சுந்தரர் பாடியவை
- 8 திருவாசகம் திருக்கோவையார்
- 9 திருவிசைப்பா
- 10 திருமூலர் திருமந்திரம்
- 11 காரைக்கால் அம்மையார், சேரமான்பெருமாள், ஐயடிகள் காடவர் கோன் முதலிய பதினொருவர் பாடிய பிரபந்தங்கள்
- 12 திருத்தொண்டர் புராணம் (பெரிய புராணம்)

# "பரவியே பற்றிடணும்!"

திரு. க. ஆ. கலியாணசுந்தரம் அவர்கள்
இராமேச்சுரம்.

ஆடுகின்றார் பரமன்
பாடுகின்றார் பத்தர்
கூடுகின்ற கோதையரோ
கொவ்வைச் செவ்வாய்திறந்து

சிந்துகின்றார் நல்லதிரு
செந்தேன் திருவாசகத்தை.
தில்லைநட ராசன்நடம்
எல்லையிலா ஆனந்தம்!

என்றெல்லாம் பேசுகின்றார்
அன்றலரும் மலர்கொய்தே.
பந்தமுடன் பாசமெலாம்
சொந்தமில்லை யெனச்சொல்லும்

திருக்குறிப்போ டும்பெருமான்
திருநட்டம் பயிலுகிறார்.
பாடுகின்ற வண்டினங்காள்!
ஓடிடுங்கள் பண்ணிசைக்க

என்றுமணி வாசகரோ
நின்றுதமிழ் பேசுகின்றார்.
நன்றுமனம் செழித்திடவும்
நற்பிறவி யெய்திடவும்

என்றுமவன் தாள்நினையும்
ஐந்தெழுத்தை ஓதிடணும்!
நற்றமிழில் நால்வர்தரும்
சொற்றுணையைப் போற்றிடணும்!

பற்றற்றான் பற்றினைநாம்
பரவியே பற்றிடணும்!

# மதிப்புரை*

## "ஸ்ரீபரார்த்த நித்திய பூஜாவிதி"

ஸ்ரீ அகோர சிவாசாரியார் அருளிய சிவாலய நித்திய பூஜாவிதி என்னும் ஸ்ரீ பரார்த்த நித்திய பூஜாவிதி-தமிழ் மொழிபெயர்ப்பு (இரண்டாம் பதிப்பு)- மொழி பெயர்ப்பாசிரியர்: வியாகரண சிரோமணி K. M. சுப்பிரமணிய சாஸ்திரிகள். பரிசோதித்தவர்கள்:- திரு. பொ. முத்தைய பிள்ளை அவர்கள், சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள். பொருளுதவியாளர்: திரு. மு. ராம. சுப. சுவாமிநாதன் செட்டியார் அவர்கள்.

வெளியீடு கிடைக்குமிடம் :—

சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம்,

தேவக்கோட்டை.

பக்கம் 12 + 143 விலை ரூபா 2-00 (இரண்டு)

இது ஒரு வடமொழி நூலின் தமிழாக்கம். சிவ வழிபாடு ஆத்மார்த்தம், பரார்த்தம் என இருவகைப்படும். பரார்த்த வழிபாட்டுமுறை இந்நூலில் நன்கு கூறப்பெற்றுள்ளது இந்நூல் முகவுரையிலே, இந்நூலிற் கண்ட பொருள் சுருக்கமாகவும் தெளிவாகவும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இந்நூல் பூர்வ பாகம், உத்தரபாகம் என இருபிரிவுகளை உடையது. பூர்வபாகத்தில் நித்தியாநுட்டான முறை சொல்லப்பட்டுள்ளது. உத்தர பாகத்தில் ஆலயங்களில் நாடோறும் நடைபெற்றுவரும் பூஜைக்குரிய காலம், முறை விபரங்களும் விளக்கம் பெற்றுள்ளது. அருமையான இந்நூல் வெளியிட வேண்டும் பொருளுதவி புரிந்த செட்டியார் அவர்களின் வள்ளன்மையும் பக்தியும் பாராட்டற்குரியது.

இந்நூல் சிறந்த முறையில் எழுதி அச்சிடப்பெற்றுள்ள தெனினும், பக்கம் 119-ல், தொடர்ந்து சொல்லப்படும் செய்தி

* குறிப்பு : *மதிப்புரைக்குப் புத்தகம் அனுப்பும் அன்பர்கள் புத்தகப் பிரதிகள் இரண்டு அனுப்புதல் வேண்டும்.*

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க.)

# பொது மறை

திரு. டி. ஏ. தனபாண்டியன் அவர்கள்

உலகிலுள்ள பல்வேறு சமயங்களையும் கொள்கைகளையும் கொண்ட அனைவருக்கும், எல்லாக் காலத்தவருக்கும் இன்றியமையாத ஒப்பற்ற பொதுமறையாக விளங்குவது திருக்குறள். கற்றோரும், சான்றோரும், முதியோரும், இளைஞரும், மாணவர்களும் ஏன் எல்லோருமே இந்த அறநூலைப் பெரிதும் விரும்பிப் படித்து வருவதே இதன் பெருமைக்குச் சிறந்த சான்றாகும். அமிழ்தினும் இனிய செந்தமிழின் சிறப்பிற்குத் திருக்குறள் ஒரு பெருங்காரணம் என்று சொன்னால் அது மிகையாகாது.

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்னும் பழமொழி திருக்குறளின் பெருமையை எடுத்துக் காட்டுகிறது. ஔவைப் பிராட்டியாரும் இதை அறிந்துதான்,

---

*சென்னை 'வானொலி' ஆசிரியர் அவர்கள் அனுமதிப்பெற்று இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.*

---

(முன் பக்கத் தொடர்ச்சி.)

தொடர்பு அற்று—அடிக்குறிப்பாகக் கொடுக்கப்பெற்ற தீபோபசாரச் செய்திகளுக்குப் பக்கம் 120 முதல் 123 முடிய இடம் கொடுக்கப்பெற்று—மீண்டும் பக்கம் 124ல் தொடங்கப்பெற்று இருப்பது வாசகர்களின் கவனத்தைச் சோதனை செய்வதாகும்.

இப்பதிப்புச் சென்னை மாநில அறநிலையத்துறை ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார், B. A., B. L., அவர்களால் வெளியிடப் பெற்ற பெருமையும் உடையது.

மிகவும் உபயோகமாக இருக்கக் கூடிய இந்நூல், அன்பர்களிடம் இருப்பதோடு மட்டுமன்றி, ஒவ்வொரு தேவஸ்தான நூல்நிலையத்திலும் இருப்பின் மிகவும் பயன்படும்.

"பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்"

என்று பாராட்டியுள்ளார். உலகியலையும் உலக தர்மங்களையும், எந்தச் சமய நெறியையும் பற்ருது, எல்லோருக்கும் தெளிவாகவும் அழகாகவும், சொல் நயம் பொருள் நயம் விளங்க ரத்னச் சுருக்கமாக விளக்கும் பெருமை கொண்டது திருக்குறள். ஆகையினுல்தான்,

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

என்று இந்நூலை இடைக்காடர் சிறப்பித்துள்ளார். உலகத்தார் மனதில் தோன்றும் அரியபெரிய கருத்துக்கள் எல்லாம் இந் நூலில் அடங்கி உள்ளன. ஒரு சிறு உதாரணம்,

"இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்"

என்ற ஒரு குறளில் ஏசுநாதரின் அன்புமொழி, கீதையின் உபதேசம், நபிநாயகத்தின் அருள்வாக்கு, காந்தியடிகளின் அஹிம்சா கொள்கை எல்லாம் அடங்கி விட்டன. இதேபோல் ஒவ்வொரு குறளும் ஒரு தத்துவத்தையே தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது. பண்டைத் தமிழரின் சிறந்த பண்பை அறியவும் இந்நூல் அருந்துணை புரிகின்றது.

திருக்குறள் எழுதப்பட்ட காலம் துவங்கி அதன் புகழ் மேன்மேலும் வளர்ந்து கொண்டே வந்து அகில உலகமெங்கும் அது பரவி நிற்கிறது. திருக்குறளின் அறத்துப்பாலும் பொருட்பாலும் "தேம்பாவணி" என்னும் தீந்தமிழ்க் காவியம் இயற்றிய வீரமாமுனிவரால் இலத்தீன் மொழியில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. டாக்டர் ஜி. யூ. போப் இந்நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். டாக்டர் கரால் என்பவர் இந்நூலை இலத்தீன், ஜெர்மன் ஆகிய இரு மொழிகளிலும் மொழி பெயர்த்துள்ளார். இன்னும் பல்வேறு உலக மொழிகளிலும் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வுலகில் "பைபில்" என்று சொல்லப்படும் கிறிஸ்தவ வேதநூலுக்கு அடுத்தபடி அதிகமான மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள பெருமை திருக்குறளுக்குத்தான் உண்டு. இதை உணர்ந்துதான்,

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்று அமரகவி பாரதியார் பெருமிதத்தோடு பாடியிருக்கிறார்.

திருக்குறள், நாலடியார் நான்மணிக்கடிகை போன்ற பதினெட்டு நூல்கள்கொண்ட "பதினெண் கீழ்க் கணக்கு" என்னும் தொகுப்பைச் சேர்ந்ததாகும். இது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பால்களை யுடையது. இல்லறவியலில் துவங்கிக் கற்பியலில் முடியும் ஏழு இயல்களை யுடையது. நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்கள் கொண்டது. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துக் குறள்கள் வீதம் மொத்தம் 1330 குறட்பாக்களைக் கொண்டது இந்நூல்.

சிறப்புப் பொருந்திய குறள் வெண்பாக்களாலாகிய நூல் என்பதுதான் திறக்குறளின் பொருள். படிப்போர் இதயத்தைக் கவர்ந்து நிற்கும் திருக்குறள், திருவள்ளுவப் பயன், வாய் மொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை, உத்திர வேதம், பொருளுறை, முதுமொழி போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.

திருக்குறளுக்கு ஆதியில் தருமர், மணக்குடவர், தாமத்தர், பரிதி, திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காலிங்கர், நச்சர், பரிமேலழகர் எனப் பதின்மர் உரை எழுதி யுள்ளனர். இவற்றுள் பரிமேலழகர் உரையே சிறந்து விளங்குகிறது. இது தவிர இடைக் காலத்திலும் தற்காலத்திலும் பலர் இதற்கு உரை எழுதியுள்ளனர். திருக்குறளை ஆராய்ந்தும் விளக்கியும் மேற் கோளாகக் எடுத்து காட்டியும் எழுதப்பட்ட நூல்கள் இன்னும் பலப்பல.

திருக்குறள் ஆசிரியரான திருவள்ளுவர், பகவன் என்ற பெரியோருக்கும், ஆதி என்னும் அம்மையாருக்கும் அருந்தவப் புதல்வராகப் பிறந்தார். திருவள்ளுவர் என்பது அவரது இயற் பெயர் என்று சிலர் கூறுகின்றனர். இது அவரது குடிப்பெயர் என்று வேறு சிலர் கருதுகின்றனர். அக்காலத்தில் வள்ளுவர் என்போர் யானைமீது முரசறைந்து அரசன் ஆணை சாற்றி வந்

தனர். வள்ளுவர் என்போர் மன்னருக்கு உள்படு கருமத் தலைவராக விளங்கியவரென்பதும், பெருங்கதை முதலிய பண்டை நூல்களால் அறிகிறோம். வள்ளுவர், அரசாங்கத்தில் மன்னரைச் சார்ந்தொழுகி இராஜகாரிய ஆலோசகராய்ப் பணியாற்றினார் என்பது சிலரது கருத்து.

தெய்வப் புலவர், கடைச் சங்க காலத்திலிருந்தவர் என்று கொள்ளப்படுகிறது. கடைச் சங்க காலத்தார்முன் வள்ளுவர் திருக்குறளை அரங்கேற்றினர் என்றும் அரங்கேற்றிய காலத்தில் சங்கப்பலகை மற்ற நூல்களைத் தள்ளிவிட்டு இவர் நூலொன்றையே அங்கீகரித்ததென்றும் கூறுவர். சிலர் இவர் கடைச் சங்க காலத்திற்கும் சில நூற்றாண்டுகளுக்கு முற்பட்டவர் என்றும் பல ஆதாரங்களுடன் சொல்கின்றனர்.

இவர் சென்னையை அடுத்த மைலாப்பூரில் அவதரித்தவர் என்று கருதுகின்றனர். இன்னும் சில அறிஞர் இவர் மதுரையில் அவதரித்தவர் என்றும் மயிலாப்பூரில் வாழ்ந்தவர் என்றும் கொள்கின்றனர். இவர் வாசுகி என்னும் கற்பில் சிறந்த பெண் மணியை மனைவியாகப் பெற்று இல்லறத்தை இனிது நடத்தினார் எனத் தெரிகிறது.

வள்ளுவனார் இன்ன மதத்தைச் சேர்ந்தவர் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. எல்லாச் சமயங்களிலும், எல்லா நூல்களிலும் உள்ள நல்லவைகளை யெல்லாம் ஒருங்கே திரட்டிப் பொதுப்படையாக எல்லோருக்கும் பயன் படும்படி இவர் கூறியதால் இவரைச் சர்வ சமயவாதி என்றே கொள்ள வேண்டும்.

திருவள்ளுவர் என்பது இவரது பிரசித்தமான பெயராக இருந்தாலும், முதற் பாவலர், தெய்வப் புலவர், பொய்யில் புலவர், செந்நாப் போதார், பெருநாவலர் என்னும் பல பெயர்களாலும் இவர் வழங்கப் பெறுகிறார்.

திருச்செந்திலாண்டவன் துணை

# திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

## திருப்பொன்னூசல்

இனித் திருப்பொன்னூசல் ஆவன :— தன்வசமின்றி அருள் வசமாகும் காலம் சகலத்தின் செய்தியும், சுத்தத்தின் செய்தியும், சமானமாய் ஒன்றுகும் தன்மையாகிய அருளின்றிறமை யென அருளிய வநுபூதி காண்க.

இத்திருப்பா ஒப்புமை பற்றி வந்த ஆறடித்தரவு கொச்சகக் கலிப்பா; திருத்தில்லையிலோதியது எனக் காண்க.

இனி நாராயண னறியாத நற்கமலப் பொற்பாத மிகுதியாகிய வருளின் (தி. - ன.) :—

சீரார் பவளங்கால் முத்தங் கயிறுக
ஏராரும் பொற்பலகை யேறி இனிதமர்ந்து
நாரா யணனறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்
கூராகத் தந்தருளு முத்தர கோசமங்கை
ஆரா வமுதி னருட்டா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூச லாடாமோ.

(இ - ள்). ஆணவ மலத்தைப் போர் செய்யுஞ் சத்திய ஞானவேல் போன்ற திருநோக்கமுடைய ஞானப்பெண்களே! கேண்மோ! தகர வித்தியாபுர இரண்மய கோச மன்றுள்ளே சம்புபட்ச பரநாதாதியே யழகு பொருந்திய பவளக் காலாக, பரவிந்துவே முத்துச் சங்கிலியாக, திருவருள் அழகான சுத்த மாயா புவனமே திருப்பலகையான குண்டலி ரத்தின சிவசிம்மாசனத்தின் மேல், பிரேரக சத்தி சிவமே எழுந்தருளி, பசுவர்க்கத் திருமால் அறிவொண்ணுத் திருவடி, நாயான நமக்கு மிகுந்த பேரானந்தமாக அநுக்கிரகஞ் செய்யுந் திருவுத்தரகோச மங்கை அமிர்த வின்பத் திருவருட் பொற்பாத கமலங்களையே துதித்து, அசையாமலசையும் அசபை நிருத்தத் திருப்பொன்னூசலாடுவோம்; ஞானப்பெண்களே! என வருளியதைக் காண்க.

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை—திருவான்மியூர், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அனுமதிபெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- ஷை நூல் நிலையத்தில் கிடைக்கும். 20% கழிவு உண்டு.

உ

சிவ சிவ

# உத்தரகோசமங்கையில் பட்டர் படிக்காசு நிதி ரூபா 2,000/-

'உத்தர கோச மங்கையுள் இருந்து
வித்தக வேடம் காட்டிய வியல்பும்' என்றும்

'பத்திசெய் அடியரைப் பரம்பரத்து உய்ப்பவன்
உத்தர கோச மங்கையூர் ஆகவும்'

என்றும் மாணிக்கவாசகரால் பாடப்பெற்றதும்,

சராசரங்கள் எல்லாவற்றையும் ஈன்றும், கன்னியெனப் புகழ்ப்பெறும் அன்னை (மங்கை)க்கு,வேதாகமங்களில் உண்மைப் பொருளை (கோசம்)இறைவன் உபதேசம் (உத்தரப்)செய்த காரணத்தால் உத்தரகோசமங்கை என்றும், பரமனுக்கு அருள் புரிந்தமையின் பிரமபுரம் என்றும், பிரமன் தவம்புரிந்து சாத்துவிக குணம் ஓங்கப்பெற்றமையால் சாத்துவிகபுரம் என்றும், வியாச முனிவர் தவம் செய்து பேறு பெற்றமையால் வெதிரிகாரணியம் என்றும், வியாக்கிரபாதர் தவம் செய்தமையின் வியாக்கிரபுரம் என்றும், தன்னை விரும்பிவந்தடைந்தவர்க்குச் சின்மயமாய் விளங்குதல் பற்றி ஆதி சிதம்பரம் என்றும், வடதிசையில் காசிப்பதி போல் தென்றிசையில் முத்திப்பதியாய் விளங்குதல் பற்றித் தென்காசி என்றும் பல்வேறு பெயர்களையுடையதும்,

ஆயிரம் முனிவர்கள் ஒருகால் இத்தலத்தில் அருந்தவம் ஆற்ற, மண்டோதிரிக்கு அருள்செய்யச்செல்வதாகவும், அங்ஙனம் அருள்செயுங்கால் அக்கினிதீர்த்தத்தில் தோன்றும் அக்கினிப்பிழம்பில் அனைவரும் மூழ்கித் தம்மையடையலாம் என்றும், இறைவன் அருள் செய்த வண்ணம் தீப்பிழம்பு தோன்ற, 999 முனிவர்கள் சோதியில் வீழ்ந்து மறைய ஒருவர் மட்டும் இறைவன் அளித்த வேதாகமச் சுவடியுடன் புண்ணிய தீர்த்தக் கரையில் தங்கிவிட, இறைவன் தீயில் மூழ்கிய முனிவர்களை இலிங்கமாக உறையச் செய்து தானும் அன்னோர் நடுவில் ஒரு லிங்கமூர்த்தியாய் அமர்ந்து சகஸ்ரலிங்கம் ஆயின வரலாற்றுச்

சிறப்புப்பொருந்தியதும், தீப்பிழம்பு தோன்றிய பொழுது வேதாகமச்சுவடியுடன் தங்கிய முனிவர் வேதாகமச்சுவடியைப் பேணியிருந்தமையின் 'தேவ வருஷம் நூறு கடந்தபின் பாண்டிய நாட்டில். மறையவர் குலத்துதித்துத் தடுத்தாட்கொள்ளப் பெற்று மாணிக்கவாசகன் என்று புகழுமாறு மதுரங்கனிந்த தீந்தமிழ் பாடுவாய்' என்று இறைவன் அருளியவாறு பின்னைப் பிறவியில் மாணிக்கவாசகராகி 'நீத்தல் விண்ணப்பம்' பாடிய பதியாயதும்,

வேதாகமச் சுவடியுடன் தங்கியிருந்த முற்பிறப்பு நிகழ்ச்சி நினைவு கூரும் முறையில் அக்கினி தீர்த்தக்கரையில் மாணிக்க வாசகர் சுவடியுடன் எழுந்தருளியுள்ள ஆலயம் இன்னும் காணும் தலமாயதும் ஆன உத்தரகோசமங்கையில் மங்கள நாயகி சமேத மங்களேசுவரருக்கு அகம்படித் தொண்டு செய்யும் பட்டர் ஒருவர்க்குப் பின் மூன்ருவது பாராவில் கண்ட வண்ணம் படிக்காசு அளித்தற் பொருட்டு இத்தருமம் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்றது. இது 'திருவுத்தரகோசமங்கையில் பட்டர் படிக்காசு நிதி' எனப் பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 2,000/– ரூபா இரண்டாயிரம். இது ஆண்டொன்றுக்கு 7-1/2% வட்டி தரக்கூடிய நிலையான முதலீடாகக் கும்பகோணம் கனரா பாங்கில் பத்து வருஷங்களுக்கு முதலீடு செய்யப் பெற்றுள்ளது. பிக்சட் டிபாஸிட் இரசீது நெ. 489059 – 16—7—1966 – 120 மாதங்கள். இது நம்மாலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலனம் செய்யப்பெற்று வரும்.

3. அ. உத்தரகோசமங்கையில் கோயில் கொண்டருளும் உத்தர கோசமங்கைக்கு அரசு, ஆதி சிதம்பரநாதர் ஆகிய மரகதக் கூத்தர்க்கு ஆண்டிற்கு ஒருமுறை நடைபெறும் மார்கழித் திருவாதிரை அபிஷேக நாளில் சந்தன மெய்ப்பூச்சு நிகழ்த்தவும், மரகதக் கூத்தர்க்கு அபிஷேக ஆராதனை செய்யும் ஆதி சைவ பட்டர்க்குப் படிக்காசு அளிக்கவும் இந் நிதியிலிருந்து ஆண்டு தோறும் கிடைக்கும் வட்டித் தொகை பயன்படுத்தப் பெற்று வரும்.

3. இவ்வட்டித் தொகையிலிருந்து நிர்வாகச் செலவு போக எஞ்சிய தொகையில் ரூ. 25/– மட்டும் உத்தரகோசமங்கையில் ஆதி சிதம்பரேசர்க்கு மார்கழித் திருவாதிரை நாளில் சந்தன மெய்ப்பூச்சுக்காகச் செலவிடப்பெறும். அத் தொகை ரூ. 25/–ம் ஷை கோவில் நிர்வாக அதிகாரிக்கு மார்கழித் திருவாதிரைக்கு முன்னர் அனுப்பி வைக்கப் பெறும். ஷை நிர்வாக அதிகாரி சந்தன மெய்ப்பூச்சு நிகழ்த்தச்செய்து, நிகழ்த்தச் செய்த விவரத்தை நமக்கு ஆண்டு தோறும் தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

இ. மார்கழித் திருவாதிரையில் திருவுத்தரகோசமங்கையில் மரகத நடராசருக்கு அபிஷேக ஆராதனைத் தொண்டு நிகழ்த்தும் ஆதி சைவ பட்டர் ஷை அபிஷேக ஆராதனை நடத்திய பின்னர்த் திருவுத்தரகோசமங்கைக் கோயில் நிர்வாக அதிகாரி அல்லது டிரஸ்டியிடம் இருந்து அத்தாட்சி அனுப்பினால், அந்த ஆதி சைவ பட்டர்க்குப் படிக்காசுத் தொகையாக ரூ. 108/- ரூபாய் நூற்று எட்டு மட்டும் ஷை ஆதி சைவ பட்டர்க்கே அனுப்பப்பெறும்.

4. ஷை சந்தன மெய்ப்பூச்சுத் தொகையும் பட்டர் படிக்காசுத் தொகையும் வட்டி வரவுக்கு ஏற்பக் குறைக்கவும் கூட்டவும் பெறும்.

5. ஷை வட்டி வருமானம் வேறு எந்த முறையிலும் மாற்றி அமைக்கப்பெறமாட்டாது. இம்முதற்பொருள் திருப்பியளிக்கப் பெறின் அதிக வட்டி வரக்கூடிய முதலீடுகளில் முதலீடு செய்யப்பெறும். இம்முதற்பொருள் நம்பேரிலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்து வரும்.

"நீல வுருவிற் குயிலே நீள்மணி மாடம் நிலாவும்
கோல அழகிற் றிகழும் கொடிமங்கை உள்ளுறை கோயில்
சீலம் பெரிது மினிய திருவுத்தர கோச மங்கை
ஞாலம் விளங்க விருந்த நாயகனை வரக் கூவாய்"

Tirupanandal
Dated 16–9–1966 } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran.*

Registered at Tiruvadamarudhur Sub Registrar's office on 20-9-66 as No. 53 of 1966 of Book 4 volume 53, pages 209 to 212.